இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna, Sri Lanka: Tel: 021-222 2378 Fax : 021 222 9041 -E-mail: editorkavalan@gmail.com ISSN 1391-7633

மலர்: 142 இதழ் : 01 திகதி: 14.01.2018 விலை : 20.00

## பல்லாயிரக்கணக்கான இறைமக்கள் பங்கேற்க சில்லாலையில் புனித யோசவ் வாஸ் ஆண்டு நிறைவுநாள்



புனித யோசவ் வாஸ் ஆண்டு நிறைவுநாள் நிகழ்வுகள் பல்லாயிரக்கணக்கான இறைமக்களின் பங்கேற்புடன் சில்லாலையில் 13.01.2018 சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றிய யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனதுமறையுரையில் புனித யோசவ் வாஸ் மரியன்னை மீது அளவு கடந்த பக்தியும், மரியன்னையின் அடிமையாகவுமிருந்து இறை விசுவாசத்தை பொதுநிலையினர் மத்தியில் பல்வேறு சவால்களுக்கிடையில் விதைத்தார்.

புனித யோசவ் வாஸ் இறை விசுவாசத்தைப் பரப்புவதற்கு பொது நிலையினர் பக்கபலமாக இருந்தனர்.

இன்று பொதுநிலையினராகிய நீங்களும் குருக்கள், துறவியருடன் இணைந்து இறை விசுவாசத்தைப் பரப்ப முன்னின்று உழைக்க அழைப்புப் பெறுகின்றீர்கள் என ஆயர் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்நிறைவுநாள் நிகழ்வுகள் புனித கதிரை மாதா ஆலயத்தில் காலையில் கண்காட்சியுடன் ஆரம்பமாகி மதியம் வரை

(தொடர்ச்சி 12ம் பக்கம்...)

## சுதுமலை புனித யூதாததேயு புதிய ஆலயத் திறப்பு விழா



சுதுமலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புனித யூதாததேயு ஆலயம் 08.01.2018 அன்று யாழ்.ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

தற்போதைய பங்குத் தந்தை அருட்பணி. S.J.Q ஜெயறஞ்சன் அடிகளார் 2016ம் ஆண்டு ஆலய கட்டுமாணப் பணிகளில் அக்கறை கொண்டவராக ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து முதற் தடவையாக நற்கருணைப்பேழையும், திருப்பண்டக் காப்பகமும் அமைத்தார். பின்னர் 27.09.2017 இல் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் பங்குத்தந்தை அவர்களால் நாட்டப்பட்டு அவரது முயற்சியினாலும் மானிப்பாய் பங்கு மக்கள், அயல் பங்கு மக்கள், யூதாததேயுவின் பக்தர்கள் மற்றும் இந்து சமய மக்களின் தாராள உதவியினாலும் 08.01.2018 இல் புதுப்பொலிவுடன் இவ்வாலயம் எழுந்துள்ளது.

இப் புதிய ஆலயத்திறப்பு விழாநினைவாக வெளியிடப்பட்ட நினைவு மலரின் முதற்பிரதியை மானிப்பாய் பங்குத்தந்தை ஜெயறஞ்சன் அடிகளார் வழங்க ஆயர் அவர்கள் பெற்றுக் கொண்டார். இப்புதிய ஆலயத்திறப்பு விழா நிகழ்வில் ஆயரோடு, குரு முதல்வர், இளவாலைக் ....

(தொடர்ச்சி 12ம் பக்கம்...)

## யாழ்ப்பாணம் மறைமாவட்ட சமூகதொடர்பு நிலைய திறப்புவிழா



யாழ்ப்பாணம் மறைமாவட்ட சமூகதொடர்பு நிலையம் 23.12.2017 காலை யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் அசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையம் மறைக்கல்வி நிலையத்தில் அமைந்துள்ளது. பல வருடங்களுக்கு முன்பாக அருட்பணி பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரால் புனித பத்திரிசியார் கல்லூரியில் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் மறைக்கல்வி நிலையத்திற்கு இடம்மாற்றப்பட்டு நாட்டின் போர் சூழல் காரணமாக கைவிடப்பட்டது.

(தொடர்ச்சி 12ம் பக்கம்...)

### புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் தேசிய மட்டத்தில் சாதனை.

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஜெயராஜா போல் ஜான்சன் ஆங்கில மொழிமூலத்தில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மேலும் இக்கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் ஐந்து மாணவர்கள் 3 ஏ பெற்றுள்ளதுடன், விஞ்ஞானப் பிரிவு மற்றும் கலைப் பிரிவுகளில் 2 ஏ. பி பெறுபேறுகளையும் மாணவர்கள் பெற்றுள்ளனர். இம்மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## யாழ் மறைமாவட்டத்தில் ஆயர் அவர்களால் இளையோர் ஆண்டு அங்குரார்ப்பணம்



புனித யோசவ் வாஸ் ஆண்டை நிறைவு செய்யும் இறுதிநாள் நிகழ்வு சில்லாலையில் நடைபெற்றபோது, அந்நிகழ்வின் இறுதியில் யாழ் மறைமாவட்ட ஆயர், இளையோர் ஆண்டினை மறைமாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் கொடி ஆயரினால் ஏற்றப்பட்டு இளையோர் கீதம் இசைக்கப்பட்டு இவ்வருடத்துக்கான கருப்பொருளை தாங்கிய இலச்சினை இளையோரிடம் ஆயர் அவர்களால் கையளிக்கப்பட்டது. உலக ஆயர்களின் 15 ஆவது மாமன்றம் இளையோரை மையப்படுத்தி ஒன்றுகூடும் இவ்வாண்டில், யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் 'இறை, திட்டம் தேடும் இளையோர் பயணம்' என்ற கருப்பொருளில் இளையோர் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டின் நவீனத்துக்குள் இலத்திரனியலின் ஆதிக்கம், உலக மயமாக்கல் போன்றவற்றால் ஆட்கொள்ளப்பட்ட புதிய உலக ஒழுங்கின் பின்புலத்தில், மனித வாழ்வியல் அதிவேகமாக சுழன்றுகொண்டிருக்கும் இக்காலத்தில், இளையோர் தம் வாழ்வை தொலைத்துவிடும் அபாயகரமான சூழலில் அவர்களின் இருப்பை தக்கவைத்து இறை திட்டம் நோக்கி அவர்களை வழிப்படுத்த இவ்வாண்டில் சிறப்பான ஒரு சந்தர்ப்பம் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

## புனித யோசவ் வாஸ் திருத்தல கட்டுமானப் பணிக்கான நிதிப்பங்களிப்பு

சில்லாலையில் அமையவுள்ள புதிய புனித யோசவ் வாஸ் திருத்தலத்தின் கட்டுமானப்பணிக்கு நிதி சேகரிக்கும் முயற்சி சில்லாலை பங்கு தந்தை அருட்பணி A. அகஸ்டின் அடிகளாரின் திட்டமிடலில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிதிசேகரிப்பானது ஆலயத்தின் பரப்பளவினை அடிப்படையாகக் கொண்டு அதற்கு அமைவான பற்றுச் சீட்டுக்கள் விற்பனை செய்வதன் மூலம் நிதியினை சேகரிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இத்திருத்தலத்தின் கட்டுமானப் பணிக்கு நிதியுதவி வழங்க விரும்புபவர்கள் இப்பற்றுச்சீட்டினைப் பெற்று உதவிக்கரம் வழங்கலாமென பங்குதந்தை அருட்பணி A.அகஸ்டின் தெரிவித்துள்ளார்.

## புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபராக அருட்பணி A.P.திருமகன் அடிகளார் நியமனம்



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபராக அருட்பணி A.P. திருமகன் அடிகளாரை யாழ் ஆயரும், கல்லூரியின் முகாமையாளருமான பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நியமித்துள்ளார்.

ஆயரின் இந்நியமன அறிவிப்பை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் கடந்த 11.01. 2018 வியாழக்கிழமை கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் குழாம் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார். புதிய அதிபர் அவர்களை யாழ் ஆயர் அவர்கள் எதிர்வரும் 2018.01.25 ஆம் திகதி பணி நியமனம் செய்து வைப்பார். புதிய அதிபரின் பணி சிறக்க எம் வாழ்த்துக்கள்.

கடந்த 10 ஆண்டுகளாக கல்லூரியின் அதிபராகவும், 30 ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியாற்றிய அருட்பணி ம. ஜெறோ செல்வநாயகம் அடிகளாருக்கு பத்திரிசியார் குடும்பத்துடன் இணைந்து எம் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)

# எமது எண்ணம்

## சிறுமை நீங்கப் பொங்குவோம்

தைப்பொங்கல் தமிழர் திருநாள். உழவர் திருநாள். நன்றித் திருநாள். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற எதிர்பார்ப்புடன் எத்தனையோ பொங்கல்கள் பொங்கி விட்டோம். தொடர்ந்தும் பொங்குகின்றோம். பானையில் மட்டுமன்று எம் மனங்களிலும் கூடவேதான்.

நல்லாட்சி அரசாங்கம் தை 08 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியை தேசிய நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தி நிற்கின்றது. நல்லாட்சி நிலைக்க நல்லிணக்கம் அவசியம். இன. மத. மொழி வேறுபாடின்றி புரிந்துணர்வுடன் அனைவரையும் சமமாக மதிக்காதவரை இந்த நல்லிணக்கம் என்பது நம்பகமானதாக நிலைகொள்ள முடியாது. புனரமைப்பு பணிகளும். வாழ்வாதார வேலைத்திட்டங்களும். காப்பற் வீதி அமைப்பும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என ஆட்சியாளர் கருதினால் அது பகற்கனவாகி விடும். காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கும். சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் நீதியுடன் கூடிய தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதுடன் புதிய அரசியலமைப்பில் சிறுபான்மை சமூகத்தவருக்கு பரிபூரண உரிமைகளை அரசு வழங்கின் நாட்டில் நல்லிணக்கம் பொங்கும்.

கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் போர்ப் புலத்தில் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்ட நிலை மாறி. இன்று விபத்து மரணங்கள் எமது மண்ணில் மலிந்து வருகின்றன. அண்மைய நாட்களில் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புக்கள் நாளொன்றுக்கு எட்டாக எகிறி வருவதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. இவ்வாறு உயிரிழப்பவர்கள் இளைஞர்களாக இருப்பது ஜீரணிக்க முடியாத மன வேதனையைத் தருகின்றது. போரில் இளைஞரைப் பலி கொடுத்து வலிகண்ட எமக்கு மீண்டும் ஒரு துன்பக் கலசமா? என சிந்திக்கத் தூண்டுகின்றது. கண்மூடித்தனமாக வாகனங்களை செலுத்துவதும். விதிமுறைகளைப் பிற்பற்றாமையும். மது போதையும். அலைபேசியின் கவனக் கலைப்பும். மனித உயிரை மதிக்கத் தெரியாமையும் விபத்துகளுக்குக் காரணமெனில். இந்த துன்ப நிலை நீங்கப் பொங்குவோம்.

நமது இளைஞர் சமுதாயம் காட்டாற்று வெள்ளம்போல் செல்லும் திசை அறியாதும் புரியாதும் பயணித்துக் கொண்டிருக்கும் மற்றுமொரு அபாய நிலையும் நம் சமூகத்தை ஆட்டி வைத்துள்ளது. கேரளக்கஞ்சா தாராளமாக கிடைப்பதால் ஏராளமான இளையோர் வாளேந்தி நிற்கின்றனர். வாளேந்திய சங்கிலி மன்னனைப் பார்த்தோம். அது வீரத்தின் விளைவு. இன்று வாளேந்தும் வாலிபரைப் பார்க்கின்றோம். அது எம் குலத்தின் ஈனம். வன்புனர்வுக் கலாசாரம் மற்றொரு பக்கம் வலை விரித்துள்ளது. மனிதத்துவத்தை மிருகமாக்கும் மிலேச்சத்தனம் இது. இவற்றில் மயங்கிக் கிடக்காது மருந்திட இந்த ஈனநிலை கண்டு பொங்குவோம்.

வேலையில்லாப் பிரச்சினை நம் மத்தியில் இன்று பூதாகாரமாக வெடித்துள்ளது. வேலையற்ற பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள். சுகாதாரத் தொண்டர்கள் என வருடக் கணக்கில் வேலைவாய்புக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேர்முகப் பரீட்சை நடைபெற்றும் நியமனங்கள் வழங்கப்படாது காலம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. தனியார்துறையில் வேலை வாய்ப்பு அதிகம் இருப்பதாகக் கூறி அரசாங்கம் மௌனித்திருக்கிறது. அன்றாட சீவியத்தைக் கொண்டு செலுத்த முடியாமல் தத்தளிக்கும் இக்குடும்பங்களின் அவலநிலை கண்டு பொங்குவோம்.

நவீன தகவல் தொழில்நுட்ப இலத்திரனியல் ஊடகங்களுக்குள் நாம் இன்று மீளமுடியாது புதையுண்டு போயிருக்கின்றோம். நன்மையில் தீமையும். தீமையில் நன்மையும் கலந்திருப்பது இயற்கையின் நியதியெனினும் தீமைகளைப் புறந்தள்ளி நன்மைகளைக் கடைப்பிடிப்பது நமது தலையாய கடமை. இதிலிருந்து நாம் தவறி விடுகின்றோம். முகப்புத்தகத்தில் முகம் புதைத்து. தொலைக்காட்சி நாடகங்களில் எம்மையே தொலைத்து. சினிமாவில் சிக்குண்டு அனைத்தையும் குறிப்பாக புனிதத் திருநாட்கள். பெருநாட்களைக்கூட கேளிக்கைப்படுத்தும் எமது வாழ்வு கேலிக்குரியதாக மாறியுள்ளது. குடும்ப வாழ்வு. கல்வி. ஆன்மீக வாழ்வு. பொருளாதாரம் என வாழ்வியல் துறைகள் அனைத்தும் இவற்றால் ஆட்டங் கண்டுவிட வீழ்ச்சிப் பாதையில் நம் பயணம்தொடர்கிறது. வீழ்ச்சியில் எழுச்சி பெறப் பொங்குவோம்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் எமது வடமாகாண மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தி அளிப்பனவாக அமைந்துள்ளதாக கல்விப்புலம் கருத்து வெளியிட்டுள்ளது. குறிப்பாக கணிதப் பிரிவில் இரண்டு மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலாம். மூன்றாம் இடங்களைப் பெற்று தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இவர் தம் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் வாழ்த்துக்குரியவர்கள். சாதனைகள் பல படைத்த தமிழ்க் கல்வி உலகு அண்மைய காலங்களில் சோதனை கண்டிருந்தாலும் மீண்டும் கல்வியில் பிரகாசிக்கும் சமிக்ஞை தென்படுகின்றது. இத்தகைய பெருமைகள் தொடர்ந்திடப் பொங்குவோம்.

யாழ்ப்பாண மறைமாவட்டம் இவ்வாண்டை இளையோர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி "இறைதிட்டம் தேடும் இளையோர் பயணம்" என்னும் தொனிப்பொருளில் இளையோர் வாழ்வை மேம்படுத்த எத்தனித்துள்ளது. இந்நிலையில் சமய நிறுவனங்கள், பாடசாலைகள், சமூக அமைப்புகள் இளையோரின் வாழ்வில் திருப்பங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து இளம் சமூகம் பசுமையில் பயணிக்க இறைவனின் அருள் வேண்டி பானைகளில் நெல்லரிசியையும். மனங்களில் நல்லெண்ணங்களையும் இட்டுப் பொங்குவோம். இனிதான பொங்கல் வாழ்த்துக்கள்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# செபிக்காத மேய்ப்பர் மக்களுக்கு நெருக்கமாக இருக்க இயலாது

மேய்ப்பரின் அதிகாரம் இறைவனுக்கும் மக்களுக்கும் நெருக்கமாக இருப்பதிலிருந்து வருகின்றது என்று சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அதிகாரம் கொண்டவர் போன்று இயேசு போதிப்பது பற்றிக் கூறும் மாற்கு நற்செய்தி வாசகத்தை (மாற்.1,21-28) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உணர்வு, அருகாமை. சீரான வாழ்வு ஆகியவை மேய்ப்பர் மற்றும் அவரின் அதிகாரத்தின் மூன்று பண்புகள் என்று கூறினார்.

இயேசுவின் புதிய போதனை இறை தந்தையிடமிருந்து பெற்ற அதிகாரம் எனும்கொடையிலிருந்து வருவது என்றும். மறைநூல் அறிஞர்களும் சட்ட வல்லுனர்களும் உண்மையைக் கூறினாலும் அவர்கள் கூறியது மக்களின் இதயங்களைத் தொடவில்லை என்றும் உரைத்த திருத்தந்தை. இயேசுவின் போதனை மக்கள் மனங்களில் வியப்பை உருவாக்கி அவர்களைத் திகைக்க வைத்தது என்றும் கூறினார்.

இயேசு அதிகாரம் கொண்டிருந்தார் ஏனென்றால் அவர் மக்களின் பிரச்சனைகள். துன்பங்கள் மற்றும் பாவங்களைப் புரிந்துகொண்டவராய் அவர்களுக்கு மிக நெருக்கமாக இருந்தார் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். மேய்ப்பருக்கு அதிகாரத்தைக் கொடுப்பது அல்லது அதிகாரத்தை அவரில் தட்டியெழுப்புவது செபத்தில் அவர் இறைவனுக்கு மிக நெருக்கமாக இருப்பதிலிருந்து வழங்கப்படுவதாகும் என்றும் கூறிய திருத்தந்தை செபிக்காத மற்றும் இறைவனைத் தேடாத மேய்ப்பர் மக்களுக்கு நெருக்கமாக இருக்க இயலாது என்றும் உரைத்தார்.

அதிகாரம் இறைவனின் கொடை இது இறைவனிடமிருந்து வருகின்றது என்றும். அதிகாரம் என்பது இரட்டை வாழ்வு அல்ல அது சீரான வாழ்வு என்றும் மேய்ப்பர் அதிகாரத்தை இழந்தால் நம்பிக்கை இழக்க வேண்டாமென்றும். அதனை மீண்டும் உயிர்பெறச்செய்ய எப்போதும் காலம் உள்ளது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் மறையுரையில் குறிப்பிட்டார்.

# ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் திருத்தந்தையின் நிகழ்வுகள்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் தலைமையேற்று நிகழ்த்தும் திருவழிபாட்டு நிகழ்வுகள் மற்றும் பங்கேற்கும் ஏனைய நிகழ்வுகளின் விபரங்களை திருப்பீடச் செய்தித் தொடர்பகம் வெளியிட்டுள்ளது.

ஜனவரி 15 முதல் 22 ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சிலே மற்றும் பெரு நாடுகளில் திருத்தூதுப் பயணம் மேற்கொள்வதையடுத்து அந்நாள்களில் காலைத் திருப்பலிகளும். ஜனவரி 17 புதன் மறைக்கல்வி உரையும் இடம்பெறாது.

ஜனவரி 25ஆம் திகதி திருத்தூதர் புனித பவுல் மனமாற்றத் திருவிழாவையும். கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிறைவு நாளையும் முன்னிட்டு உரோம் நகர்மதிலுக்கு வெளியே அமைந்துள்ள புனித பவுல் பசிலிக்காவில் மாலை திருப்புகழ் வழிபாட்டை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நடத்துவார்.

Salus Populi Romani அதாவது உரோம் மக்களுக்கு குணம் வழங்கும் அன்னை மரியாவின் உருவப்படம் புனித மேரி மேஜர் பசிலிக்காவில் நிறுவப்பட்ட திருநாளைச் சிறப்பிக்கும் வண்ணம் ஜனவரி 28 ஞாயிறன்று பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றுவார்.

Salus Populi Romani அன்னை மரியாவின் மீது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனிப்பட்ட பக்தி கொண்டிருப்பதால் தன் திருத்தூதுப் பயணங்களின் முன்னும் பின்னும அந்த அன்னையை சந்திப்பதை அவர் பழக்கமாகக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசுவை கோவிலில் காணிக்கையாக அர்ப்பணமாக்கும் திருநாளையும் அர்ப்பணமாக்கப்பட்ட வாழ்வின் 22 ஆவது உலக நாளையும் கொண்டாடும் வகையில் பெப்ரவரி 2ஆம் திகதி புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் திருப்பலியை தலைமையேற்று நடத்துவார்.

பெப்ரவரி 14ம் திகதி திருநீற்றுப் புதனன்று மாலை புனித ஆன்செல்ம் கோவிலிலிருந்து புறப்படும் திருப்பவனியில் கலந்து கொள்ளும் திருத்தந்தைபிரான்சிஸ் அவர்கள் புனித சபீனா பசிலிக்காவில் திருப்பலி நிறைவேற்றுவார்.

பெப்ரவரி 18 ஆம் திகதி ஞாயிறு முதல் பெப்ரவரி 23 வெள்ளி வரை திருத்தந்தையும், வத்திக்கான் உயர் அதிகாரிகளும் அரிச்சா என்னுமிடத்தில் அமைந்துள்ள தெய்வீகப் போதகர் இல்லத்தில் தவக்காலத் தியானத்தில் ஈடுபட்டிருப்பர்.

### இரண்டாயிரத்து நூறு வறியோருக்கு 'சர்க்கஸ் டிக்கட்' அனுப்பிய திருத்தந்தை

"எவ்வளவுக்கு அதிகமாக கிறிஸ்துவில் நம்மைப் பதித்துக் கொள்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக தினசரி சவால்கள் மத்தியிலும் உள்மன அமைதியை கண்டுபிடிக்கிறோம்" என்ற சொற்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியில் இடம்பெற்றுள்ளன.

மேலும் ஜனவரி 11 ஆம் திகதி உரோம் நகரில் நடைபெற்ற 'சர்க்கஸ்' விளையாட்டுக் காட்சியைக் கண்டு களிக்க 2,100 வறியோருக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'டிக்கட்' அனுப்பியதாக திருத்தந்தையின் தர்மப்பணிகளை ஒருங்கிணைக்கும் பேராயர் Konrad Krajewski அவர்கள் தெரிவித்தார்.

Circus Medrano என்ற நிறுவனத்தினர் நடத்திவரும் இந்த சர்க்கஸ் காட்சியைக் காணும் வறியோருக்கு இக்காட்சியின் இறுதியில் இரவு உணவும் வழங்கப் பட்டது.

சவால்கள் நிறைந்த சூழலில் உடற்பயிற்சி, கலைநயம் என்பவற்றை வெளிப்படுத்தி, சர்க்கஸ் கலைஞர்கள் செய்யும் சாகசங்கள் நமக்கு பெரும் உந்துசக்தியாக அமைந்தது என திருத்தந்தை தெரிவித்தார்.

# இளையோரை மையப்படுத்தி உலக ஆயர்களின் 15வது மாமன்றம்



2018 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் உலக ஆயர்களின் 15 ஆவது மாமன்றம் வத்திக்கானில் நடைபெற உள்ளது. இவ்வுலக ஆயர்களின் மாமன்றத்தில் இளையோரை மையப்படுத்தி "இளையோர், நம்பிக்கையும் அழைத்தலைத் தேர்ந்து தெளிதலும்" என்ற கருப்பொருளில் இளையோர் வாழ்வை இறைதிட்டத்தை நோக்கி வழிநடத்தும் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற உள்ளன.

உலகின் ஆயர் பேரவைகள், கீழை வழிபாட்டு முறை தலத்திரு அவைகள், துறவு சபைகளின் உலகத் தலைவர்களின் ஒன்றியம் ஆகிய அனைத்தையும் கலந்துபேசி இந்த மையக்கரு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

திருஅவையின் மேய்ப்புப்பணியில் குடும்பங்கள் மையமாக அமையவேண்டும் என்ற கருத்துடன் உலக ஆயர்களின் 14 ஆவது மாமன்றம் நடைபெற்றதைத், தொடர்ந்து, கத்தோலிக்கத் திருஅவை இளையோருடன் பயணம் செய்யவேண்டும் என்ற கருத்தில் உலக ஆயர்களின் 15ஆவது மாமன்ற மையக்கரு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி



# 15 ஆவது ஆயர் மன்ற அமர்விற்கான முன் ஆயத்த மடல் வெளியீட்டு நிகழ்வில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இளையோருக்கான மடல்

**என் அன்பார்ந்த இளையோரே!**

"இளையோரின் விசுவாசமும், அழைப்பில் தேர்ந்து தெளியும் தன்மையும் " என்ற தலைப்பில் ஆயர்கள் மன்ற அமர்வானது 2018ம் ஆண்டு ஐப்பசி மாதம் நடைபெறவுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். நீங்கள் எனது இதயத்தில் இடம் பிடித்துள்ளதால் நீங்களே எனது கவனத்தின் மையமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இன்று வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கும் இம்முன்னாயத்த மடலானது நடைபெறவிருக்கும் ஆயர் மன்ற பயணத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்ற நம்பிக்கையோடு இதை உங்களிடம் ஒப்படைக்கின்றேன்.

உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்கு செல் (தொ.நூல் 12:1) என்று இறைவன் ஆபிரகாமுக்கு கூறிய வார்த்தைகளை நினைவு கூருகின்றேன். இன்று இந்த வார்த்தைகள் உங்களுக்கும் கூறப்படுகின்றது. "செல்" என்ற இந்த வார்த்தைகளினூடாக இறைவன் உங்களையும் ஓர் எதிர்காலத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்குமாறு அழைத்து நிற்கின்றார். அந்த எதிர்காலமானது அறியப்படாததாகவும் இறைவன் அதில் உடன் பயணிப்பவராகவும், அதுவே முழுமையான நிறைவுக்கு அழைத்துச் செல்வதாகவும் அமைகின்றது. நீங்கள் இறைவனின் குரலைக் கேட்கவும் தூய ஆவியின் மூச்சினால் அது உங்கள் இதயங்களில் தொடர்ந்து ஒலிக்கவும் வேண்டும் என்று உங்களை அழைத்து நிற்கிறேன்.

இறைவன் ஆபிரகாமை நோக்கி "செல்" என்று கூறிய போது அதில் அவர் என்ன சொல்ல விரும்பினார்? அவர் ஆபிராமை அவருடைய குடும்பத்திலிருந்தும்உலகத்திலிருந்தும் தூர விலகி நிற்குமாறு நிச்சயம் கூறவில்லை. ஆபிராம் அனைத்தையும் துறந்து, புதியதொரு தேசத்திற்கு செல்வதற்கான சவால் நிறைந்த உறுதியான அழைப்பைப் பெற்றுக்கொண்டார். இன்று எமக்கு இப் "புதிய தேசம்" என்றால் என்ன? இளையோராகிய இதை நீங்கள் பூமியின் கடைசி எல்லைவரை கட்டியெழுப்ப ஆழ் உணர்ந்து விரும்புகின்ற நீதியும் நட்பும் நிறைந்த சமுதாயமல்லவா?

இன்று "செல்" என்ற பதமானது துரதிஷ்டவசமாக பல்வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அவையாவன அதிகார துஷ்பிரயோகம், அநீதி, போர் போன்றவையாகிய உங்களில் பலர் வன்முறையின் அச்சுறுத்தலினால் சொந்த நாட்டை விட்டுத் தப்பியோட கட்டாயப்படுத்தப்பட்டிருக்கின்றீர்கள். மன்னன் பார்வோனின் அடிமைகளாக இருந்து ஒடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களின் அழுகுரல் கடவுளை நோக்கி எழுப்பப்பட்டது போல், உங்களின் அழுகைக் குரலும் கடவுளை நோக்கி எழுகின்றது (காண் - விடுதலைப் பயணம் 2:23)

சீடர்கள் யேசுவிடம் "ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்" என்று கேட்ட போது, அவர் அவர்களிடம் 'வந்து பாருங்கள்" (யோவான் 1:38) என்ற இயேசுவின் வார்த்தைகளை நான் உங்களுக்கு நினைவூட்டுகின்றேன். இயேசு உங்களை உற்று நோக்கி தன்னோடு பயணிக்க அழைப்பு விடுக்கின்றார். அன்பான இளையோரே!உங்களைநோக்கிய இறைவனின் பார்வையை நீங்கள் உணர்ந்தீர்களா? நீங்கள் அவரின் குரலைக் கேட்டீர்களா? இந்தப் பயணத்தை நீங்கள் மேற்கொள்ள அதன் உந்துதலை உணர்ந்தீர்களா? உள்ளத்தில் நிலவும் சத்தங்கள், குழப்பங்கள் மத்தியிலும், இறைவனின் அழைப்பு உங்கள் இதயத்தின் ஆழத்தில் தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டிருப்பதால், அது உங்களை மகிழ்வின் நிறைவிற்கு அழைத்துச் செல்லும் என்று நம்புகிறேன். உங்களுடைய வாழ்வில் இறைவனின் திட்டத்தைக் கண்டுகொள்ள, அனுபவபூர்வமான வழி நடத்துதலின் துணையுடன் தேர்ந்து தெளியும் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ளக் கற்றுக்கொள்வீர்களாகில், அது சாத்தியமாகும். உங்களுடைய பயணம் நிச்சயமில்லாதிருக்கும்போதும், நீங்கள் துவண்டு விழுந்தாலும் இரக்கத்தின் செல்வமாக இருக்கும் கடவுளின் கரம் உங்களைத் தூக்கி விடும்.

தமிழாக்கம்: அருட்சகோ.ம.அ.ஜெறாட்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

உலக இளையோர் தினம் கடந்த ஆண்டு கிராக்கோவில் (பொலந்து நாட்டின் தலைநகரம்) நடைபெற்றது. அதன் ஆரம்ப நிகழ்வில் உங்களிடம் பலமுறை கேட்டேன், "எம்மால் மாற்றம் ஏற்படுத்த முடியுமா" என்று நீங்களும் அதற்கு "ஆம்" என்று ஒருமித்து குரல் எழுப்பினீர்கள். அந்தக் குரலானது அநீதியைத் தாங்கிக் கொள்ள முடியாத பாகுபாடுகளை வளர்க்கும் உலக மயமாக்குதலுக்கு மாறிவரும் நிரந்தரமற்ற கலாசாரத்திற்கு உடன்பட முடியாத உங்களின் இளம், இளைய இதயத்தில் இருந்து எழுந்தது. ஆகவே, உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து எழுகின்ற குரலுக்கு செவி கொடுங்கள். இறைவாக்கினர் எரேமியாவைப் போல் இளைமையில் போதுமான அறிவும், அனுபவமும் இல்லையென்று நீங்கள் உணர்ந்தாலும் கடவுள் அனுப்புகின்ற இடத்திற்கு நீங்கள் செல்ல கடவுளே உங்களை ஊக்கப்படுத்துகிறார்.

"அஞ்சாதே, ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன்" (எரேமியா 1:8)

மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய உங்கள் விருப்பத்தினாலும் தாராள தன்மையினாலும், முயற்சிகளினாலும் சிறந்த உலகம் ஒன்றைக்கட்டியெழுப்ப உங்களால் முடியும். துணிவான தெரிவுகளை உங்களுக்கு முன்மொழியும் ஆவியின் குரலுக்கு செவிமடுக்கத் தயங்கவேண்டாம். ஏனெனில், உங்கள் தலைவராகிய இயேசுவை பின்பற்றுவதில் இருக்கக்கூடிய நெருக்கடிகளைச் சந்திப்பதற்கு உங்கள் மனச்சாட்சி உங்களைக் கேட்கும்போது, அதற்குத் தாமதிக்க வேண்டாம். உங்களுடைய குரலுக்கும், பிறரைப் புரிந்து கொள்ளக்கூடிய உங்கள் உணர்வுகளுக்கும்,விசுவாசத்திற்கும் செவிமடுக்கும் திருச்சபையானது உங்கள் சந்தேகங்களிற்கும், விமர்சனங்களுக்கும் செவிமடுக்க விரும்புகின்றது.

உங்களுடைய குரல்கள் உங்கள் குழுமங்களிலும், உங்கள் ஆன்மாக்களின் மேய்ப்பர்கள் மத்தியிலும் கேட்கும்படியாக ஒலிக்கச் செய்யுங்கள். புனித பெனடிக்ற் தனது சபையைச் சார்ந்த மடாதிபதிகளுக்கு கூறுகையில், நீங்கள் ஏதாவது முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முன் சபையிலுள்ள இளையவர்களோடும்கலந்தாலோசியுங்கள். ஏனென்றால் 'கடவுள் எல்லோரிலும் இளையவருக்கே சிறந்தது எதுவென்று வெளிப்படுத்துகிறார்" (புனித பெனடிக்ரின் சட்டம் III, 3)

இந்த ஆயர் மன்ற அமர்வின் பயணமும் இவை பற்றியதாகத்தான் அமைகின்றது. என் சகோதர ஆயர்களும் நானும் இன்னும் கூடுதலாக "உங்கள் மகிழ்ச்சிக்காக உங்களோடு ஒத்துழைக்கிறோம்"(2கொரி.1:24)உங்களைப்போன்று இளமையான நசரேத்தூர் மரியாவை கடவுள் அன்புடன் நோக்கினார். அத்தகைய தன்மையுள்ள மரியாவிடம் உங்களை ஒப்படைக்கிறேன். ஏனெனில், மகிழ்வின் நிறைவோடும், தளரா மனத்தோடும் கடவுளின் அழைப்பிற்கு "இதோ நான் இருக்கிறேன்" (லூக்.1:38) என்ற வார்த்தைகளால் பதிலளித்த மரியா, உங்களையும் கரம் பிடித்து வழி நடத்துவார்.

தந்தைக்குரிய அன்புடன் பிரான்சிஸ்

# எம் குழந்தைகளுக்கு புனிதராகும் ஆசையை ஊட்டிடுவோம்

## திருப்பாலத்துவ தினச் செய்தியில் இயக்குநர்

மனிதனின் வாழ்க்கை வட்டத்தில் சிறுவர்கள் பருவமானது முதன்மையான பருவமாகும். பொதுவாக நோக்கின் சிறுவர்கள் எனும் பருவமானது மிக மகிழ்ச்சிகரமான பருவமாகவும், இன்பகரமான பருவமாகவும், பல அனுபவங்களைப் பெறக்கூடிய பருவமாகவும் திகழ்கின்றது. இத்தகைய சிறுவர் பருவமானது இன்றைய காலகட்டத்தில் சவால்கள் நிறைந்த, இடர்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய பருவமாக மாறி நிற்பதும் மாறிவருவதும் வேதனை தரும் விடயமாக அமைவதுடன், எதிர்கால உலகம் சூனியப்பட்டு விடுமோ என அஞ்சவும் தோன்றுகின்றது.

நமது சிறுவர் உலகு கடந்த முப்பது ஆண்டுகளாக எதிர்நோக்கிய பெரும் யுத்தத்தின் வடுக்களை தம்மில் சுமந்து நிற்கின்றது. மூன்று தசாப்த கால யுத்தம் முடிவடைந்த நிலையில் எமது சிறுவர்கள் அடைந்த பாதிப்புக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் எண்ணிலடங்காது. பொருளாதார நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்பட்டும், மாற்றுத் திறனாளிகளாகவும், பெற்றோரை உறவுகளை இழந்தும், பாலியல் வன்முறைக்குள்ளாகியும், போதைக்கு அடிமைப்பட்டும், வேலைக்கு அமர்த்தப்பட்டும், கல்வி வாய்ப்பை இழந்தும், நவீன மாயைக்குள் சிக்குண்டும், உரிமைகள் மீறப்பட்டும் பல்வகைப் பிரச்சினைகளை சிறுவர்கள் எதிர்கொள்கின்றனர். அவை வார்த்தை வலைக்குள் அகப்படாத அவலங்களின் படிமங்களாக எமது மண்ணில் அரங்கேறி வருகின்றது.

சிறுவர்கள் மட்டில் இயேசுக் கிறிஸ்துவும் திருவிவிலியமும், திருச்சபையும் கொண்டிருக்கும் கருத்துக்களை நாம் கவனத்தில் எடுத்து சிறுவர்களின் வாழ்வியல் தொடர்பாக செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். சிறுவர்கள் தொடர்பாக குரல் கொடுப்பதுடன் மட்டும் நாம் மௌனித்து விடமுடியாது. சிறுவர்கள் பாதிப்புறும்போது சுலோகங்களையும், பதாதைகளையும் தாங்கி நின்று கண்டனங்கள் செய்வதுடனும் எமது கடமை முடிந்து விட்டது என அமைதி அடையவும் முடியாது.

திருத்தந்தையால் உருவமைக்கப்பட்ட திருப்பாலத்துவ சபை சிறுவர்களின் வளமான வாழ்வு கருதி பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. சிறுவர்கள் மத்தியில் இறை நம்பிக்கையை ஊட்டி, இயேசுவின் அன்பை அவர்கள் சிறு வயது முதல் சுவைத்திட, அதன்வழி அவர்களை உலக மாயைக்குள் சிக்கவிடாது சீரிய பாதையில் பயணிப்பதற்கு ஆக்கபூர்வமான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறுவர்களும் அவர் தம் பெற்றோரும், திருப்பாலத்துவ சபை உறுப்பினர்களும் இதற்குப் பூரண ஒத்துழைப்பை நல்குவதன் மூலமும் இச்செயற்பாடு இலக்கை அடைய முடியும்.

"சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" (மத்.19-14) என இயேசு திருவாய் மலர்ந்ததை நாம் சிறுவர்களின் மலர்ச்சிக்காக கருத்தில் எடுக்கவேண்டும். சிறுவர்களின் புனிதத்துவமும் ஞானமும் எத்தகையது என்பதை வெளிப்படுத்திய கிறிஸ்து இயேசு "ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர் (மத்.11:25) எனத் தந்தையாம் கடவுளைப் புகழ்வதைக் காண்கின்றோம். மேலும் லூக்கா நற்செய்தி 17: 2 இல் "இச் சிறியோரில் எவரையாவது பாவத்தில் விழச் செய்வதை விட அவ்வாறு செய்பவர்களது கழுத்தில் ஒரு எந்திரக் கல்லைக் கட்டி அவரைக் கடலில் தள்ளி விடுவது அவருக்கு நல்லது" என்ற இயேசுவின் அருள்வாக்கு சிறுவர்கள் மட்டில் எத்தகைய விழிப்புணர்வுடன் நாம் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவதுடன், சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் தண்டனைக்குரியவர் என்ற இறை நீதியையும் இயம்பி நிற்கின்றது.

சிறுவர்கள் புனிதம் மிக்கவர்கள். பிரான்ஸ் லூர்து நகரிலும் 'மற்றும் பத்திமா பதியிலும் சிறுவர்களுக்கு அன்னை மரியாள் காட்சியளித்து இறைதிட்டத்தை வெளிப்படுத்தி செபிக்கத் தூண்டியமை சிறுவர்களின் புனிதத்துவத்திற்குச் சான்றாக அமைகின்றது. இத்தகைய புனித மலர்கள் கருகிவிடாது புனிதத்தை இழந்து புதைந்துவிடாது காப்பாற்றும் பொருட்டு திருப்பாலத்துவ சபை 2018 ஆம் ஆண்டின் மையப்பொருளாக **"காலத்தின் புனிதர்கள் நாமே"** என்னும் தொனிப்பொருளில் சிறுவர்களை வழிப்படுத்த அறைகூவல் விடுத்து நிற்கின்றது. திருப்பாலத்துவ சபையின் ஊடாக சிறுவர்களை வழிப்படுத்தி அதன் வழி எம் நாட்டையும் நாளைய உலக திருச்சபையையும் சிறுவர்கள் வெற்றிகொள்ள உழைப்போம் என திடசங்கற்பம் பூணுவோம்.

இறை ஆசீருடன் வாழ்த்துக்கள்.

பாலகரின் மழலையிலும் குழந்தைகளின் மொழியிலும் உம்மைப் புகழ ஏற்பாடு செய்தீர் (மத்.21:16)

அருட்பணி S.A.றொஷான்
இயக்குநர்
திருப்பாலத்துவ சபை
யாழ்.மறைமாவட்டம்

# பொருட்செல்வத்தை தேடி அருட்செல்வத்தை இழப்பதா?

அருட்பணி.மா.றேஜிஸ் இராசநாயகம்

### முகவுரை

பொருளாதாரத்தை முதன்மைப் படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண் டுள்ள நுகர்வுக் கலாசாரத்தினால் இன்று பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கம் உலகத்தை ஒரு சந்தையாக மாற்றி விட்டது. இச் சந்தை மனிதனையே இலக்காகக் கொண்டதினால் அவன் அதில் சிக்குண்டு நுகர்வுக்குத் தேவை யான பொள்ளீட்டுவதிலேயே இரவு பகலாக தன் முழுக்கவனத்தையும் செலுத்தி தன் மகிழ்ச்சியை இழந்து விடுகின்றான்.

### மனிதன் பொருளுக்கு சமமானவனா?

இன்றைய நுகர்வுக் கலாசாரத் தில் மனிதனின் மாண்பு, மகத்துவம் என்பன மழுங்கடிக்கப்பட்டு மனிதன் ஒரு பொருளாகக் கருதப் படுகிறான். இன்று அரசோ ஏனைய நிறு வனங்களோ பொருளைப் பயன்படுத்துவது போலவே மனிதனைப் பயன்படுத்துகின்றன. எவ்வளவுக்கு ஒரு மனிதனைப் பயன் படுத்தமுடியுமோ அவ்வள வுக்கு அவனைப் பயன் படுத்திவிட்டு அதன்பின்னர் அவனை ஒரு வேண்டாப் பொருளாக வெளியேற்றி விடுகின்றன. இன்று வயோதிபர் இல் லங்களில் உள்ளவர்களோடு உரையாடி னால் இவ்வுண்மை நன்கு புலப்படும்.



### இரு பரிமாணங்கள்

அனைத்து முன்னேற்றங்களும் இரு பரிமாணங்கள் கொண்டவை. மனி தன் மனிதனாக வாழ்வதற்கு பொருள் பயனுள்ளதென்றால் அது அவசியமானது. பொருள்தான் எல்லாம் அதுவே 'தெய்வம்' என்று எண்ணினால் அது அவனது தொலைநோக்கை தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும். இதன் விளைவாக மனங்கள் மரத்து, இதயங்கள் இறுகி அவன் தன் உறவுகளையும், நண்பர்க ளையுமே தேடாதுவிடுகிறான். அப்படித் தேடினாலும் சுயதேவைக்கே தேடி அதன் விபரீத விளைவுகளைச் சந்திக்கிறான்.

மனித முன்னேற்றம்:

"பேராசையோடு சொத்தைத் தேடுதல் தனிமனிதனின் தன்னிறைவுக் கும், மனித மாண்புக்கும் பெருந்தடை யாக அமையும். "பேராசைதான் அறநெறி வளர்ச்சியின்மையின் தெளிவான காரணி" என்கிறது 'மனித முன்னேற்றம்' என்னும் கத்தோலிக்க திருஅவையின் திருத்தந்தை 6ம் பவுலின் சுற்றுமடல். செல்வம் என்னும் சொல்லே அது சென்றுவிடும் அல்லது நிலையற்றது என்பதை சுட்டி நிற்கிறது.

### அறிவற்ற செல்வன்

நாம் சேர்த்துவைக்கும் பொருட் கள் அனைத்தையும் ஒருநாள் இழக்க வேண்டும். இதை விளக்க விவிலியத்தில் ஒரு கதை கூறப்படுகிறது. 'செல்வன் ஒருவனின் நிலம் நன்றாக விளைந்தது. அவன் "நான் என்ன செய்வேன்? என் விளைபொருட்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே! என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாக்கி என் தானியத்தையும் பொருட்களையும் சேர்த்துவைப்பேன். பின்பு, என் நெஞ்சமே, உனக்குப் பல் லாண்டுகளுக்கு வேண்டிய பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. நீ உண்டு, குடித்து மகிழ்ந்திரு என்று சொல்வேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால், அன்றிரவு கனவில் அவனுக்கு ஒரு குரல் கேட்டது. "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" ' பலருடைய வாழ்வில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் பார்த்த பின்பும் இவை எமக்குச் சுடலை ஞானமாகவே நின்றுவிடுகிறது. அதாவது அந்தக் கணத்துடன் நின்றுவிடுகிறது.

### இறுதி வார்த்தைகள்

இறக்கும் ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்

**"உலக வர்த்தகத்தின் உச்ச நிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக்கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை அற்ப மகிழ்ச்சி. மரணம் என்னை அண்மித்தபோது, நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன். பெருமையென நான் நினைத்த என் பெயரும் பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின. பணத்தைமட்டுமே வாழ்வில் குவித்த அதேவேளை வேறு முக்கியமானவைகளைக் கைநெகிழ்ந்துவிட்டேன் என்பதை உணருகிறேன். உறவுகளையும், வாழ்வின் ஏனைய விழுமியங்களையும் நான் தேடியிருக்கவேண்டும்".**

சொத்துக்களின் தொடர்தேடல் ஒருவரின் தொலைநோக்கையே தொலைத்துவிடும். ஆழமாக அன்பு செய்யும் இதயத்தை இறைவன் தந்தார். ஏன்? என் வாழ்வின் இறுதியில் என்னுடன் கூட வருவது என் அன்புச் செயல்களைத் தவிர வேறு எவை? "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?"

### இவர் யாரோ?

இழந்தவற்றில் எதையும் மீளப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்வை? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும். **"உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரி சனம்."** இறப்பின்போது இந்த இறுதி வார்த்தைகளை உதிர்த்த உதடுகள் யாரு டையவை என்று வியக்கிறீர்களா? இவர் ஒரு மறைபோதகரோ மெய்யியலாளரோ அல்லது ஆன்மீகவாதியோ அல்ல. மசிந் ரொஷ் கணனி, அப்பிள் கணனி, ஐபோன், ஐ பாட், ஐ பொட் என்பவற்றைக் கண்டு பிடித்த கோடீஸ்வரர் ஸ்ரீவ் ஜோப்ஸ். இவரது வார்த்தைகள் வாசகர் உள்ளங் களை ஊடறுத்து செல்லுகின்றன அல் லவா? அன்பை அடித்தளமாகக் கொண்ட ஆன்மீகம் இல்லாமல் வெறும் உலக செல்வம் எம்மைப் பின்தொடருமோ?

இவற்றையே கத்தோலிக்க திரு அவையின் இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறும்போது: "வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவருமே. இறைவனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்" என்றார். இவற்றைத் தேடினால் நாம் கண்களை மூடும்போது கடவுள்முன் வெறுங்கையராக நிற்கமாட்டோம்.

**"அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்"**

என்றார் பொய்யா மொழிப்புலவர்.

அதவாது தீதின்றித் தேடுகின்ற பொருள் நமக்கு புண்ணியத்தையும் இன்பத்தையும் தருகிறது. மனத் தூய்மையோடு வாழ்வுக்குத் தேடவேண்டியவற்றைத் தேடும்போது உள்ளம் உயரும், வாழ்வும் உயரும். அன்றேல் நுகர்வுக் கலாசாரத்துள் மூழ்கி மடியவேண்டி ஏற்படும்.

### மனித மாண்பு மிக்கவர்களாய் வாழ நாம் எதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்?

❖ எமது ஆன்மீகக் கொள்கைகளில் தெளிவான உறுதிப்பாடுவேண்டும்.

❖ நாம் மனித மாண்பை மதிக்க வேண் டும். எமது உடல், அறிவு, ஆன்மா என் பவை புனிதமானவை என்பதை உணர்ந்து அவற்றை நன்கு பேணிப் பாதுகாக்கவேண்டும். அதுபோன்று மற்றவர்களையும் மாண்போடு நடத்தவேண்டும்.

❖ இந்த நுகர்வுக் கலாசாரத்தால் நாம் தொலைத்துவிட்ட கொடைகள், ஆசீர் வாதங்களை மீளக் கண்டு பிடிக்கவேண் டும். குறிப்பாக குடும்ப உறவுகளை நன்கு பேணவேண்டும். உறவுகளை உறவுகளாக மதித்து வாழவேண்டும்.

சமூக, சகோதர உதவிகளில் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்டோரின் நல்வாழ்வின் உயர்ச்சிக்காக தன்னல மற்ற சேவைகளில் ஈடுபட வேண்டும். தன்னலமற்ற சேவைக்கு எமக்கு எத்தனையோ எடுகோள்கள் வரலாற்றில் உண்டு. "ஒன்றின் தொடக்கமல்ல, அதன் முடிவே கவனிக்கத்தக்கது" என்று விவிலியம் கூறுகிறது. அதாவது, ஒரு மனிதனின் பிறப்பு அல்ல, அவனது வாழ்வும் அதன் நிறைவுமே முக்கியமானவை.

---

# இளையோரே! இறைதேடலில் ஈடுபடுங்கள்!

**அன்பு இளம் நெஞ்சங்களே!**

அவனியில் சிறப்புற்று வாழ ஆண்டவர் பெயரால் வாழ்த்துக்கள்!

அவசரமான உலகினிலே இறைவனைத் தேடும் காலம் அண்மித்துவிட்டது. உலக போக்கிலே, உலக செல்வங்களில் மட்டுமே கவனம் செலுத்தி உங்களை இழந்துபோகும் நிலைக்கு உள்ளாகவேண் டாம். அனைத்திற்கும் மேலாக, இறை செல்வத்தைத் தேடுவதில் உன்னிப்பாக ஈடுபடுங்கள்.

ஆறு வேண்டுகோள்களை புனித யாக்கோபு (5:7-10) தனது திருமுகத்தில் முன்வைக்கின்றார்:

1. இறைவனுக்குப் பணிந்து வாழுங்கள்.
2. அலகையை எதிர்த்து நில்லுங்கள்.
3. இறைவனை அணுகிச் செல்லுங்கள்.
4. உங்கள் கைகளையும் உள்ளங்களையும் தூய்மை யாக்குங்கள்.
5. ஆண்டவர் முன் உங்களைத் தாழ்த் துங்கள்.
6. ஆண்டவரின் வருகைக்காகப் பொறுமை யோடிருங்கள்.

இன்றைய உலகில் உள்ள உறவை இறை வ னோடுள்ள உறவுக்கு ஒப்பிடமுடியாது. உங்கள் ஒவ் வொருவரின் நன்மைக்காக உலகோடு பேரம் பேசிக் கலந்துரையாட வேண்டிய நிலையில் உள்ளீர்கள். உங்களது எல்லாக் காரியங்களிலும்மகிழ்ச்சியானதையே தேடவேண்டியநிலையில் நிகழ்காலத்தை யும் எதிர்காலத்தையும் இணைத்து வாழவேண்டிய வர்களாய் உள்ளீர்கள். எனவே, இறை இராட்சிய வரு கைக்காக விழித்திருந்து செபியுங்கள்.

"நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் ஆண்டவரின் மகிமைக்காகவே செய் யுங்கள். நான் அனைத்திலும் அனைவருக்கும் உகந்த வனாய் இருக்கிறேன். நான் எனக்குப் பயன்படுவதை நாடாமல், பலரும் மீட்பு அடையும்படி அவர்களுக்குப் பயன்படுவதையே நாடுகிறேன்" (1கொரி. 10:31,33) என்று புனித பவுல் பகிர்கின்றார்.

அப்பொழுது ஒருவர் இயேசுவிடம் வந்து, "போதகரே, நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். இயேசு அவரிடம், "நன்மையைப் பற்றி என்னை ஏன் கேட்கிறீர்? நல்ல வர் ஒருவரே. நீர் வாழ்வடைய விரும்பினால் கட்டளை களைக் கடைப்பிடியும்" என்றார். அவர் "எவற்றை?" என்று கேட்டார். இயேசு, "கொலை செய்யாதே விபசாரம் செய்யாதே களவு செய்யாதே பொய்ச்சான்று சொல்லாதே தாய் தந்தையை மதித்து நட. மேலும் உன்மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர் வாயாக" என்று கூறினார். அந்த இளைஞர் அவரிடம், "இவை அனைத்தையும் நான் கடைப்பிடித்து வந்துள் ளேன். இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம்முடைய உடைமைகளை யெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்றார் (மத்தேயு 19:16-21).

நவீன கால அலகைகளாக மது, போதைவஸ்து, கையடக்கத் தொலைபேசி, இந்திய சினிமாப் படங்கள், நீலப் படங்கள் போன்றன காணப்படுகின்றன. அவை நாளும் பொழுதும் எல்லை தாண்டி, இளைஞர்களைப் பாதிப்பிற்கு உள்ளாக்கி வருகின்றன என்றால் அது மிகை யாகாது. எனவே, இளையோரே, வருமுன்காப்போராய் எச்சரிக்கையாய் நடந்து கொள்ளுங்கள். உங்களுக்கு நீங்களே சாவுக் குழி தோண்டுவதா? வேண்டவே வேண் டாம் அன்பு நெஞ்சங்களே! அவதானமாய் இருந்து கொள்ளுங்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரின் பின்னரான ஆறு வருடங்களில் மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் தொழில் துறைகள் முழுமையாக மேம்பாட்டை அடையாத நிலையில் மது பாவனை மட்டும் உச்ச நிலையில் இருக் கின்றது. மேலும், போதைப்பாவனை உச்சத்தைத் தொட்டு விட்டன என்றே கூறலாம். இவை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் மௌனமாக இருப்பதுடன் சமய, சமூக அமைப்புக்களும் மகளிர் அமைப்புக்களும் தொடர் மௌனத்தையே அனுஷ்டித்துவருகின்றன. ஆசிரியர்கள், பெற்றோர், சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் போன்றோர் அக்கறையற்று இருப்பது மாணவர்கள் தடம்புரளச் செய்வதன் காரணமாகும். இளையோரே, நீங்கள் ஒன்றிணைந்து கோஷ்டிமோதல் கள், வாள்வெட்டுச் சண்டைகள், கலாச்சார சீர்கேடுகள் போன்றவற்றை முறியடிக்க அணிசேருங்கள், சமுதாய மறுமலர்ச்சிச் செம்மல்களாய் உருவெடுத்து, அவனியில் சாதனையாளர்களாய் திகழுங்கள்.

இறுதியாக ஓர் உண்மைச் சம்பவம். இருவர் ஒரு கிராமத்திலுள்ள சாராயக் கடையிலிருந்து வெளியேறு கையில்,

ஒருவர்: "நீங்க எங்க போறீங்க?" மற்ற வர்: "நான் வீட்ட போறன்." ஒருவர்: "நானும் வீட்டதான் போறன், உங்கட வீட்டிற்கான பாதை?"

மற்றவர்: "நேர போய், வலதால திரும்பி இடக்கையால திரும்பினா 3வது வீடு."

ஒருவர்: "அட என்ர வீடும் அதே பாதையிலதான் இருக்கு."

இருவரும் பேசியவாறே நடந்தார்கள். சிறிது நேரத் தின்பின்னர், ஒரு வீட்டுக் கதவில் இருவரும் தட்டினார்கள். அவ்வீட்டு அம்மா வந்து கதவைத் திறந்துகொண்டே, "தகப்பனும் மகனும் வழமைபோல நல்லாக் குடிச்சிற்று வந்து நிற்கிறீங்க. எப்பதான் திருந்தப் போறீங்களோ?" என்று கதறினாள்.

இளையோரே வாருங்கள்!

இறைவனைத் தேடுங்கள்! அவர் புது வாழ்வு தருவார்.

அருட்பணி:வின்சன் பற்றிக் (அமதி)

# காவலன் கண்மணிகள்



**அன்புக் கண்மணிகளே!**
**இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல் வாழ்த்துக்கள் 2018 இல் உங்களைச் சந்திப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.**

இங்கேயுள்ள இந்த இரண்டு பையன்களையும் பாருங்கள். இவர்களுக்கு இடையே அதிக வித்தியாசம் இருக்கிறது அல்லவா? இவர்களுடைய பெயர் உங்களுக்குத்

## எதிரும் புதிருமான இரட்டையர்கள்



தெரியுமா? வேட்டையாடுகிறவன் பெயர் ஏசா. செம்மறியாடுகளைக் கவனித்துக் கொண்டிருப்பவன் பெயர் யாக்கோபு. ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் பிறந்த இரட்டைப் பிள்ளைகளே இந்த ஏசாவும் யாக்கோபும். ஈசாக்குக்கு ஏசாவில் அதிகம் பிரியம். ஏனென்றால் வேட்டையாடுவதில் அவன் கெட்டிக்காரன். வீட்டிலுள்ளவர்கள் சாப்பிடுவதற்குத் தேவையான உணவை அவன் வேட்டையாடிக் கொண்டு வருவான். ஆனால் ரெபெக்காளுக்கு யாக்கோபைத்தான் அதிகம் பிடிக்கும். ஏனென்றால் அவன் அமைதியானவன் சாந்தமானவன்.

இந்த இரட்டையர்களின் தாத்தா ஆபிரகாம் இன்னும் உயிரோடிருந்தார். கடவுளைப் பற்றி அவர் சொல்வதையெல்லாம் யாக்கோபு எவ்வளவு ஆசை ஆசையாய் கேட்டிருப்பான் என்று நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஆபிரகாம் 175 வயதில் மரித்தார். அந்த சமயத்தில் இந்த இரட்டைப் பிள்ளைகளுக்கு 15 வயது.



ஏசா 40 வயதாக இருந்தபோது கானான் தேசத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களைத் திருமணம் செய்துகொண்டான். இதை நினைத்து ஈசாக்கும் ரெபெக்காளும் மிகுந்த வேதனைப்பட்டார்கள். காரணம் அந்தப் பெண்கள் கடவுளை வணங்காதவர்கள்.

பின்பு ஒருநாள் தன் தம்பி யாக்கோபின் மேல் ஏசாவுக்குப் பயங்கர கோபம் ஏற்படுமளவுக்கு ஒரு சம்பவம் நடந்தது. அதாவது, அவன் தந்தை ஈசாக்கு தன்னுடைய மூத்த மகனை ஆசீர்வதிக்க வேண்டிய சமயம் வந்தது. தான் மூத்த பிள்ளையாக இருந்ததால் அந்த ஆசீர்வாதம் தனக்குத்தான் கிடைக்கும் என ஏசா எதிர்பார்த்தான். ஆனால், அந்த ஆசீர்வாதத்தைப் பெறும் உரிமையை ஏற்கெனவே அவன் யாக்கோபுக்கு கொடுத்திருந்தான். அது மட்டுமல்ல, இந்த இரண்டு பிள்ளைகள் பிறந்தபோது யாக்கோபுதான் அந்த ஆசீர்வாதத்தைப் பெறுவான் என்று கடவுள் முன்கூட்டியே சொல்லியிருந்தார். அவர் சொன்னபடியே நடந்தது. ஈசாக்கு அந்த ஆசீர்வாதத்தை யாக்கோபுக்குக் கொடுத்தார்.

இது தெரிந்தபோதே யாக்கோபின் மீது ஏசாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. யாக்கோபைக் கொல்லப்போவதாக கோபாவேசத்துடன் கூறினான். இதைக் கேட்ட ரெபெக்காள் என்ன நடக்கப் போகிறதோ என நினைத்து மிகவும் கவலைப்பட்டாள். அதனால் தன் கணவன் ஈசாக்கிடம், 'ஏசா செய்தது போல இந்தக் கானான் தேசத்துப் பெண்களில் ஒருத்தியை யாக்கோபும் திருமணம் செய்தால் என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது' என்று சொன்னாள்.

ஈசாக்கு தன் மகன் யாக்கோபை அழைத்து, 'கானான் தேசத்துப் பெண்ணை நீ திருமணம் செய்துகொள்ளக் கூடாது. அதற்குப் பதிலாக ஆரானிலிருக்கும் உன் தாத்தா பெத்துவேலின் வீட்டுக்குப் போ. அவருடைய மகனான லாபானின் மகள்மாரில் ஒருத்தியை திருமணம் செய்துகொள்' என்று சொன்னார்.

அப்பாவுக்கு கீழ்ப்படிந்து, வெகு தொலைவில் ஆரானிலிருந்த தன் சொந்தக்காரர்களிடம் போக யாக்கோபு உடனடியாக கிளம்பினார்.

கீழ்ப்படிவே வாழ்வின் மேற்படி

## தேங்காயை எடுக்கட்டா....?

வயது முதிர்ந்த அம்மா ஒருவர் வீதிவழியே போய்க்கொண்டிருந்தார். வீதியோரத்தில் இருந்த தென்னைமரத்திலிருந்து ஒரு தேங்காய் அவர் மீது விழுந்தது விட்டது. வலி தாங்கமுடியாமல் அவர் கீழே விழுந்துவிட்டார். வீதியால் சென்ற பலர் ஐயோ பாவம் என கூறிச் சென்று விட்டனர். சிலர் பக்கத்தில் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள்.

சிறிது நேரத்தின் பின் ஒருவன் வந்தான் விழுந்துகிடந்த அம்மாவைத் தடவி என்ன நடந்தது? எங்கே நோகிறது? உதவி செய்வதா? எனக் கேட்டான். அம்மா மிக மகிழ்ச்சியுடன் இவன் ஒருவன் தான் மனிதன் என நினைத்த அக்கணமே வந்தவன் "அம்மா இந்தத் தேங்காயை எடுக்கட்டா" எனக் கேட்டான். இப்படித்தான் நம்மில் பலர்...

# அழகு பாருங்கள்



**பறவைகளைப் பாருங்கள் – அவை**
**பறக்கும் அழகைப் பாருங்கள்**
**காக்கைகளைப் பாருங்கள் – அவை**
**கரையும் அழகைப் பாருங்கள்**
**குருவிகளைப் பாருங்கள் – அவை**
**சீச்சுக் குரலைக் கேளுங்கள்**
**கிளிகளைப் பாருங்கள் – அவை**
**பேசும் அழகைப் பாருங்கள்**

**ஆடும் மயிலைப் பாருங்கள் – அவை**
**அகவும் அழகைப் பாருங்கள்**
**கூவும் அழகைப் கேளுங்கள்**
**குரங்குகளைப் பாருங்கள் – அவை**
**குதிக்கும் அழகைப் பாருங்கள்**
**ஆடும்மாடும் பாருங்கள் – அவை**
**மேயும் அழகைப் பாருங்கள்**

**நாங்கள் தம்மைப் பாருங்கள் – அவை**
**குரைக்கும் அழகைப் பாருங்கள்**
**பூனைகளைப் பாருங்கள் – அவை**
**சீறும் அழகைக் கேளுங்கள்**
**யானைகளைப் பாருங்கள் – அவை**
**பிளிறும் அழகைப் பாருங்கள்**
**சிங்கங்களைப் பாருங்கள் – அவை**
**சிலிர்க்கும் அழகைப் பாருங்கள்**

**புலிகள் தம்மைப் பாருங்கள் – அவை**
**உறுமும் அழகைப் பாருங்கள்**
**நரிகள் தம்மைப் பாருங்கள் – அவை**
**ஊளையிடு வதைக் கேளுங்கள்**
**மான்கள் தம்மைப் பாருங்கள் – அவை**
**மருளும் அழகைப் பாருங்கள்**
**முயல்கள் தம்மைப் பாருங்கள் – அவை**
**பாயும் அழகைப் பாருங்கள்**

அருட்பணி செ.அன்புராசா அமதி
('சிறகடிக்கும் சிட்டுக்கள்'
கவிதைத் தொகுப்பிலிருந்து...)

# புத்தாண்டு தீர்மானங்கள்

இளைஞர் ஒருவர் நண்பரிடம் புதிர் ஒன்றைத் தொடுத்தார். "ஒரு குளத்தின் கரையில் மூன்று தவளைகள் அமர்ந்திருந்தன. அவற்றில் ஒன்று குளத்தில் குதிக்கத் தீர்மானித்தது. மீதி எத்தனை தவளைகள் கரையில் இருக்கும்?" என்று கேட்டார். "இது என்ன பெரிய புதிர்... மீதி இரண்டு தவளைகள் இருக்கும்" என்று பெருமையாகச் சொன்னார் நண்பர்.

"நண்பா, கேள்வியைச் சரியாகப் புரிந்துகொண்டு பதில் சொல். மூன்று தவளைகளில் ஒன்று குளத்தில் குதிக்கத் தீர்மானித்தது. மீதி எத்தனை தவளைகள் கரையில் இருக்கும்?" என்று கேள்வியை மீண்டும் சொன்னார் இளைஞர்.

நண்பர் எதையோப் புரிந்து கொண்டவர்போல், "ஓ, புரிகிறது... கரையில் ஒன்றும் மீதி இருக்காது. ஒரு தவளை குதித்ததும், மற்ற தவளைகளும் குளத்திற்குள் குதித்துவிடும்" என்று சொன்னார். அவரது அறிவுத் திறனை அவரே மெச்சிக் கொண்டதைப்போல், புன்னகை பூத்தார்.

இளைஞர் தலையில் அடித்துக்கொண்டு, சலிப்புடன் விளக்கினார்: "நண்பா, மீண்டும் தவறாகச் சொல்கிறாய். மூன்று தவளைகளும் கரையில்தான் இருக்கும். அவற்றில் ஒன்று குளத்திற்குள் குதிக்கத் தீர்மானம் செய்ததே ஒழிய, இன்னும் குதிக்கவில்லை என்று விளக்கம் கொடுத்தார். நண்பரின் முகத்தில் அசடு வழிந்தது.

புத்தாண்டு நாளன்று இளையோர் பலர் இவ்வாண்டு செய்து முடிக்க வேண்டிய பல தீர்மானங்களை, திட்டங்களை மனதில் எண்ணியிருப்பர். தீர்மானங்களும், திட்டங்களும் மனதளவில் நின்றுவிடாமல், செயல் வடிவம் பெறவேண்டும்.

## செபத்தில் நிலைப்போம்...

அதிகாலையில் - தாவீதுபோல
மதியத்தில் - தானியேல் போல
நள்ளிரவில் - பவுலும் சீலாவும் போல
ஆபத்தில் - பேதுரு போல
துக்கத்தில் - அன்னாள் போல
துன்பத்தில் - யோபு போல
சிறுவயதில் - சாமுவேல் போல
இளமையில் - தீமோத்தேயு போல
முதிர் வயதில் - சிமியோன் போல
மரணத்தில் - யோவான் போல
வேலை தொடங்கும் போது
- எலியாஸ் போல
வேலை முடிக்கும் போது
-சாலமோன் போல

**எந்த வேளையிலும்**
**இயேசுவைப்போல**
**நாம் ஜெபிக்கவேண்டும்.**

# சிந்திக்க ஓர் சித்திரம்



# காவலன் கலசம்

## கிறிஸ்தவ அறநெறி வாழ்வு

"ஒவ்வொரு நாளையும் உன் இறுதி நாளாக நினைத்து இலக்கை நோக்கி ஓடு. நீ சிகரத்தைத் தொட்டுவிடுவாய்"



# இலக்கை நோக்கி ஓடு... இளைஞனே! இறை நம்பிக்கையோடு ஓடு...

கிரேக்க தேசத்தில் மனித உருவிலான சிலை ஒன்று உள்ளது. முன்னால் நீளமான முடியையும், பின்னால் மொட்டைத் தலையுமான அச்சிலையின் கீழ் "நான் ஓர் சந்தர்ப்பம்" என்று எழுதியுள்ளது. சந்தர்ப்பங்கள் வரும்போது இலகுவாகப் பற்றிக்கொள்ள முன்னால் நீளமான முடியுடனும் எம்மை அவை கடந்து சென்று நாம் தவறவிட்டால் எட்டிப்பிடிக்க முடியாதவாறு வழுக்கைத் தலையையும் கொண்டுள்ளது என்பதையே இச்சிலை தன்னைப் பார்வையிடுபவர்களுக்குச் சொல்லி நிற்கிறது. காலங்களும், நேரங்களும், சந்தர்ப்பங்களும் ஒருபோதும் எமக்காய் காத்திருப்பதில்லை. நாம் தான் அவற்றிற்காய் விழிப்புடன் காத்திருக்க வேண்டும்.

அப்பிள் என்றதும் முன்னொரு காலத்தில் ஆதாமும், ஏவாளும்தான் ஞாபகத்தில் வருவார்கள். அதற்காக ஏதேன் தோட்டத்தின் விலக்கப்பட்ட கனி அப்பிள்தானா? என்று என்னிடம் யாரும் கேட்கக்கூடாது. ஆனால் இன்று ஆப்பிள் என்றதும் எம் மனக்கண்களில் தெரிபவர் ஆப்பிள் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீவ் ஜொப்ஸ் (Steve Jobs) அவர்களே.

இவரை ஒருமுறை stanford பல்கலைக்கழகம் கௌரவித்ததுபோது, அவர் தன் வாழ்வின் ஆரம்பகால உண்மை நிலையை எடுத்துரைத்தார். அவை பலருக்கு வாழ்வின் உந்து சக்தியாக அமைந்தது. அவர் சொன்னார் : "இன்று என்னை இந்த உலகமே ஏறெடுத்துப் பார்க்கிறது என்பது உண்மை. ஆனால் இதே Steve Jobs இந்தத் தெருக்களில் யாருமே கவனிக்கப்பாடாத மனிதராக நடந்து திரிந்த கதை உங்களில் யாருக்குமே தெரியாத உண்மை.

வறுமையினால் என் கல்வியை நிறுத்திவிட்டு, என் வயிற்றுப் பசியைப் போக்க "கோகா கோலா" (Coca Cola) பேணிகளைப் பொறுக்கி விற்று என் வயிற்றை நிரப்ப முயற்சித்தேன். ஆனால், அவை போதுமானதாக இருக்கவில்லை. பின்னர் 7' மைல் தொலைவிலுள்ள "ஹரே கிருஷ்ணா" கோவிலில் இலவச உணவை பெற்று உண்ண ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கால் நடையாகச் சென்றேன். இத்துன்பங்கள் மத்தியிலும் நான் 17 வயதில் வாசித்த ஓர் வாசகம் என்னை வேகமாக இயக்கியது. அவ்வாசகமானது "ஒவ்வொரு நாளையும் உன் இறுதி நாளாக நினைத்து இலக்கை நோக்கி ஓடு. நீ சிகரத்தைத் தொட்டுவிடுவாய்" நானும் இதை என் சிந்தனையில் வைத்து, ஒவ்வொரு நாளும் என் முகம்பார்க்கும் கண்ணாடிக்கு முன் நின்று எனக்கு நானே சொல்லும் தாரக மந்திரம், 'Steve Jobs இன்று தான் உன் கடைசி நாள் உன் இலக்கை நோக்கி வேகமாக ஓடு!' ஓடினேன் தொட்டு விட்டேன். அன்று அங்கிருந்த இளையோர்களுக்கு Steve Jobs சொன்னார் "நீங்களும் இன்றுதான் உங்கள் இறுதி நாள் என்று நினைத்து வேகமாக ஓடுங்கள் இலக்கை அடைவீர்கள்".

**அருட்பணி : T ரவிராஜ்**

எங்கள் சமூகத்தில், எங்கள் இளையோர்களும் வேகமாகத்தான் ஓடுகிறார்கள் எங்கள் வீதிகளில். அதனால் ஒவ்வொரு நாளும் வீதி விபத்துக்கள். எத்தனை உயிர்கள் ஒவ்வொரு நாளும் காவுகொள்ளப்படுகின்றன? இலக்கின்றிய பயணங்கள் எங்கள் இளையோர்கள் பலருக்கு பாதியிலேயே முடிகிறது. அவை பரிதாப நிகழ்வுகள். தள்ளாடாத வயதில் தள்ளாடும் தோற்றத்தில் பலர். எங்கள் தெருக்களும், சந்திகளும் இவர்களைத் தாங்கித் தாங்கியே நொந்து போயுள்ளன. காலங்களும் நேரங்களும், சந்தர்ப்பங்களும் எமக்காய் ஒருபோதும் காத்திருப்பதில்லை. 2017 இப்போது அது எமக்கு இறந்தகாலம். அழுது புரண்டாலும் அது எமக்கு எட்டாக் கனியே. 2018 எம் கையில் இருக்கின்றது. தவறவிடாமல் எம் இலக்கை நோக்கி வேகமாக ஓடுவோம்.

ஆங்கிலத்தில் ஒரு வசனம் உண்டு " Try your best and leave the rest in the hands of God, He will do the best" (உன் முழு முயற்சியுடன் ஈடுபடு, மிகுதியை இறைவனின் கையில் விடு அவர் அதை திறம்படச் செய்து தருவார்) அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் காலத்தில் உள்நாட்டுப் போர் வெடித்தது. அப்போது ஒருமுறை அவரது செயலர் அவரிடம் "ஐயா நாங்கள் இந்தப் போரிலே நிச்சயம் வெற்றி பெறுவோம், ஏனென்றால் கடவுள் நம் பக்கமே உள்ளார்" என்றார். அதற்கு ஆபிரகாம் லிங்கன் "கடவுள் எம்பக்கமா, எதிரியின் பக்கமா என்பதல்ல எனது கவலை. மாறாக நானும், எனது மக்களும் கடவுள் பக்கம் உள்ளோமா என்பதே" என்றார். உண்மை என்னவென்றால் நாம் கடவுள் பக்கம் இருந்தால் எமக்கு வெற்றி நிச்சயமே.

இலக்கை நோக்கி ஓடுவது முக்கியமல்ல. தன்னம்பிக்கையோடு மாத்திரம் ஓடுபவர் வேகத்தோடு மாத்திரமே ஓடுவார். தன்னம்பிக்கையோடுகூட இறை நம்பிக்கையுடன் ஓடுபவரே வேகத்துடன் விவேகமாக ஓடுவார். விவேகம் இல்லாத வேகம் விபத்திலும், விபரீதத்திலும் முடிந்து விடும். விவேகத்தோடு கூடிய வேகம் விருத்தியையும், திருப்தியையும் கொடுக்கும். இறை நம்பிக்கையுள்ளவரிடம் இறையச்சம் இருக்கும். இறையச்சம் ஞானத்தைக் கொணர்ந்து தரும். ஞானம் நல்லது எது கெட்டது என்பதை பிரித்தறிந்து பார்க்கும். ஞானம் தான் ஒருவனுக்கு விவேகத்தைக் கொடுக்கும். ( காண். சீராக் 1:14, நீதி 1:7)

இளையோரே! எம்மைச் சுற்றிலும் தீமைகள் விதைக்கப்பட்டுள்ளன. அவை உங்களை விழுங்குவதற்காய் கவர்ச்சியோடு காத்திருக்கின்றன. ஞானக் கண்கொண்டு பார்த்தாலொழிய ஊனக் கண்களுக்கு அவை அழகான தோற்றத்தோடு மாத்திரம் காட்சியளிக்கின்றன. எனவே ஞானம் நிறைந்தவர்களாய் முன்மதியோடு செயற்படாவிடின் வாழ்வைத் தொலைத்து விடுவீர்கள். "காலம் கடந்த ஞானம் கனிகொடாது." மாறாக மன அழுத்தத்தையும், வேதனையையும் தான் கொடுக்கும்.

"பிள்ளாய்! தீயவர்கள் உன்னைக் கவர்ச்சியூட்டி இழுப்பார்கள், நீ அவர்களுடன் போக இணங்காதே! அவர்கள் உன்னைப் பார்த்து "எங்களோடு வா ; பதுங்கியிருந்து எவரையாவது கொல்வோம் ; யாராவது ஒரு அப்பாவியை ஒளிந்திருந்து தாக்குவோம் ; பாதாளத்தைப் போல நாம் அவர்களை உயிரோடு விழுங்குவோம் ; படுகுழிக்குச் செல்வோரை அது விழுங்குவது போல நாமும் அவர்களை முழுமையாக விழுங்குவோம். எல்லாவகையான அரும் பொருள்களும் எமக்குக் கிடைக்கும் ; கொள்ளையடித்த செல்வத்தால் நம் வீடுகளை நிரப்புவோம் ; நீ எங்களோடு சேர்ந்து கொள் ; எல்லாவற்றிலும் உனக்குச் சமபங்கு கிடைக்கும்" என்றெல்லாம் சொல்வார்கள். பிள்ளாய்! அவர்களோடு சேர்ந்து அவர்கள் வழியில் செல்லாதே! அவர்கள் செல்லும் பாதையில் அடி வைக்காதே! அவர்கள் கால்கள் தீங்கிழைக்கத் துடிக்கின்றன. இரத்தம் சிந்த விரைகின்றன. பறவையைப் பிடிக்க அதன் கண் முன்னே அன்று மறைவாகவே கண்ணி வைப்பார்கள். அவர்கள் பதுங்கி இருப்பது அவர்களுக்கே ஊறு விளைவிக்கும் கண்ணியாகிவிடும். அவர்கள் ஒளிந்து காத்திருப்பது அவர்களையே அழிக்கும் கொறியாகிவிடும் தீய முறையில் பணம் சேர்க்கும் அனைவரின் முடிவும் இதுவே. அந்தப் பணம் தன்னை வைத்திருப்போரின் உயிரைக் குடித்துவிடும். (நீதிமொழிகள் 1:10-19)

காலத்தின் அறிகுறிகளைக் கண்டுகொள்ள, ஞானம் வேண்டும். ஞானிகளுக்குத்தான் காலத்தின் அறிகுறிகள் வால்வெள்ளியென வானில் தோன்றும். அதுவே அவர்களை உண்மையாம் இயேசுவை நோக்கி வழி நடத்தும். அவரிடம்தான் வாழ்வுதரும் வார்த்தைகள் உண்டு. "ஆண்டவரே! நாம் யாரிடம் செல்வோம். வாழ்வுதரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன" (யோவா 6:68)

### இன்று எங்கள் ஈழதேசம்

இது...
ஒர் அலங்கரிக்கப்பட்ட சிறை
மலிந்து கிடப்பதோ...!
ஏதேன் தோட்டத்து ஆப்பிள்கள்
பச்சோந்திகளாய்
பார்க்குமிடமெல்லாம்
வஞ்சிக்கும் பாம்புகள்
ஏமாந்து போகிறோம்
ஏவாள்களாய் நாங்கள்
எஞ்சியிருப்பதெல்லாம்
எங்கள் நிர்வாணங்களே...!
இங்கே
எங்கள் நிர்வாணங்களை
நாங்களே
ரசிக்கக் கற்றுக்கொண்டதுதான்
எங்கள் துர்ப்பாக்கியம்...

# உங்கள் நாள் குப்பையற்ற நாளாக இருக்கட்டும்!

'குப்பையற்ற நாள் (Garbage-free day) என்ற தலைப்புடன் சமூக வலைத் தளத்தில் வலம்வரும் ஒரு சிறுகதை இது. இந்தக் கதையை ஓர் இளைஞர், தான் பெற்ற சொந்த அனுபவமாகக் கூறியுள்ளார்.

விமான நிலையம் செல்வதற்கு 'டாக்சியில் ஏறினேன். போகும் வழியில் திடீரென மற்றொரு கார் எங்கள் பாதையில் குறுக்கிட்டது. டாக்சி ஓட்டுனர் 'பிரேக்' அடித்து வண்டியை நிறுத்தினார். குறுக்கே வண்டியை ஓட்டி வந்தவர் தன் காரின் கண்ணாடியை இறக்கி டாக்சி ஓட்டுனரைப் பார்த்து கத்தினார். நான் பயணம் செய்த டாக்சியின் ஓட்டுனரோ அவரைப் பார்த்து புன்னகையுடன் கையசைத்தார். கத்திக்கொண்டிருந்தவர் ஏதோ முணுமுணுத்தபடியே தன் காரை ஓட்டிச் சென்றார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த நான "தப்பு செய்தது அவன் அவனைப்




பார்த்து ஏன் கையசைத்து புன்னகை செய்கிறீர்கள்?" என்று கேட்டேன். அப்போது அந்த டாக்சி ஓட்டுனர் சொன்னது அழகான ஒரு பாடம். அந்தப் பாடத்திற்கு 'குப்பை லாரி விதிமுறை' (The Law of the Garbage Truck) என்று பெயரிட விழைகிறேன். டாக்சி ஓட்டுனர் சொன்னது இதுதான் :

"நம்மைச் சுற்றியுள்ள பலர் குப்பை லாரிகளைப் போன்றவர்கள். எரிச்சல், வருத்தம், ஏமாற்றம் என்று பல குப்பைகளைச் சுமந்து அலைகின்றனர். குப்பைகள் கூடக் கூட அதை எங்காவது கொட்டவேண்டும் என்று துடிக்கின்றனர். சிலவேளைகளில் தங்கள் குப்பையை அவர்கள் உங்கள் மீது கொட்டிவிடுவர். அவ்வேளைகளில் புன்னகையோடு அவர்களுக்குக் கையசையுங்கள். அவர்கள் கொட்டிய குப்பையை நீங்கள் சுமந்து சென்று உங்கள் அலுவலகம், அண்டைவீடு, முக்கியமாக உங்கள் குடும்பம் என்ற இடங்களில் அந்தக் குப்பையைப் பரப்பாதீர்கள்" என்று கூறினார் டாக்சி ஓட்டுனர்.

இந்தக் கதையை வலைத் தளத்தில் பகிர்ந்துகொண்டவர் இறுதியில் கூறும் ஒரு வாழ்த்துரை இதுதான். "இன்று உங்கள் நாள் குப்பையற்ற நாளாக இருக்கட்டும் !" ஊரில் குவிந்திருக்கும் குப்பைகளை அகற்றும் இளையோர் அணிகளைப் பற்றி செய்திகளில் வாசிக் கிறோம். பெருமிதம் கொள்கிறோம். அதே வேளையில், இளையோர் தங்கள் உள்ளங்களில் குப்பைகள் சேராமல் பார்த்துக்கொள்வது முக்கியம்.

# காவலன் கலசம்



கதிரவன் என்னை
மேல் என எண்ணி
கொண்டாடுகிறார்களே
பொங்கலை
விவசாயியின் உள்ளத்தில்
உதித்த உண்மையே
பொங்கலாம்
ஞாலத்தவர்க்கு கொடுத்தேன்
நான் ஒளியை
ஞானத்தவரே! நீர் கொடுப்பீரோ
பிறருக்கு ஒளியை
விழ்ந்து கிடக்கும் பாரினைப் பாரீர்
அது ஏழ்ந்து நடக்க
பாதை வகுப்பீர்

## கதிரவன் வினா...?



க.அன்றூட் ஜக்சன்
வாழ்வகம்
2018 கலைப்பிரிவு
யா/ யூனியன் கல்லூரி

# வெய்யோனும் விவசாயியும்

**சூரியன் :**
உலகமெல்லாம்
உணவளிப்பவனே
உன்னதமானவனே
மண்ணில் பயிர் செய்ய இடமின்றி
கட்டடங்கள் விஞ்சுகின்றன
உணவு கிடைக்காது விடுமென
சிந்திப்பதில்லையா மனிதன்?

**விவசாயி :**
ஏன் சிந்திப்பதில்லை
இருக்கவே இருக்கிறது
சீனா, பாகிஸ்தானில்
பிளாஸ்ரிக் அரிசி ஆலைகள்
வயல் நிலமெல்லாம் தேவையில்லை
வீசும் பிளாஸ்ரிக் கழிவுகள்
உருமாற்றி பசுமதியாய்
உரைப்பையில் கட்டிவர
பிளாஸ்ரிக் பொறுக்கவல்லோ
சிந்திக்கின்றான் மனிதன் இன்று

**சூரியன் :**
ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்
ஜெகத்தினை அழித்திடுவோம் என்றானே பாரதி
அனைவரும் இன்றுவரை
மேடைகளில் இதை முழங்காமல் விடுவதில்லையே

**விவசாயி :**
மேடையில் அவ்வாறு தான் முழங்குவர்
உள்ளே இன்னும் இன்னும்
நுழைந்து பாருங்கள்
சேற்றினில் கால்புதைக்கும்
விவசாயி வீட்டில்
சோற்றுக்கு வழியின்றி
திண்டாடுவர் அவன் பிள்ளைகள்

**சூரியன் :**
ஆராய்ச்சியாளர் பலர் இருந்தும்
விவசாயத்தில் புதுமை இன்னுமா
புலரவில்லை?

**விவசாயி :**
புதுமை என்ன புதுமை
முற்றிவரும் வேளையில்
அள்ளி எறியும் இரசாயனத்தால்
மரவள்ளிவட தொடைபோல உப்பிவிட
வாங்கி உண்டு
வாந்தியெடுத்து
வறந்த சுரத்தால்
கால்வீங்கி
சிறுநீரகம் செயலற்று
வாரமொருமுறை குருதிமாற்றி
வாழும் பலரைத் தந்ததிவ்வாராய்ச்சி

**சூரியன் :**
தெரிந்து கொண்டுமா மீண்டும் மீண்டும்
தவறுவிடுகின்றனர்?

**விவசாயி :**
என்ன செய்வது?
அதிகரித்த சனத்தொகையின்
சந்தைக் கேள்விக்கு
நிரம்பல் செய்ய முடியாது
நெகிழ்ந்து, ஒரு தடவைக்கு
பலதடவை
விசிறியடித்து வீசும்
இரசாயனம்
வீறுகொண்டெழுந்து
உற்பத்தித் திறனை
உயர்த்துதல்
குறுநோக்கில்
தவறாமோ?

**சூரியன் :**
அப்படியானால்
இதுவரை
இயற்கைப் பசளையால்
இன்புற்று விளைத்தவர்
காட்டிய அனுபவம்
போதித்த
வயலும் வாழ்வும்
சாதித்ததென்ன சொல்வாயா?

**விவசாயி :**
சரியான கேள்வி
பகலவனே?
சாதனை சொல்லிவிடவா?

1. முற்றிவரும் பிஞ்சுகளை – சீக்கிரம்
முற்றவைக்க ஒரு பவுடர் பரம்பரை

2. பழுக்கத்தயாராகும் செங்காய்களை
பழுக்க வைக்க ஒரு புகையிடும் பரம்பரை

3. சதையைத் தடிப்பாக்க
விசிறிவிடும் ஓர் திரவகப் பரம்பரை

4. பூவாகி பிஞ்சாய்
காயாய் கனியாகி
அத்தனையும் உதிராதிருக்க ஒரு
போமலின் பரம்பரை

இயற்கையின் கொடையை
செயற்கையாக மாற்றிவிடும் – ஆசை
முக்குளித்து முத்தெடுத்து
நீர்க்குமிழிகளைத்தான் முத்தென்று
கோர்க்கச் சொல்கிறது
தற்போதைய சாதனைகள்

**சூரியன் :**
கல்வியாளர்கள்
ஆராய்ச்சியாளர்கள்
சமூக ஆர்வலர்கள்
இதை திருத்த வேண்டுமென
தீர்மானம் கேட்டதுண்டா?

**விவசாயி :**
அவர்களா?
சின்னதைப் பெரிதாக்கி
பெரியதைச் சின்னதாக்கி
நனோவால்,
நான் என்ற மமதைகொண்டு
இயற்கையின் படைப்பை
ஈராக்கி ஈரலையல்லோ
எரித்துவிடுகின்றனர்

**சூரியன் :**
எதைத்தான் செய்வது இதற்கு?


**விவசாயி :**
ஒன்று தான் செய்ய வேண்டும்
வயலுக்கும் இடையே தொங்கும்
கௌரவத்திரையை
கிழித்தெறிய வேண்டும்
ஒவ்வொரு விவசாயியையும்
பார் போற்றச் செய்யவேண்டும்
உன்னால் மட்டும் தான் முடியும்
இல்லையெனில்,
நீ
தைப்பொங்கல் தினத்தன்று
மட்டும்
பேசுபொருளாக இருப்பது
நிஜமாகிவிடும்
இதைக்கேட்டு
சூரியன் அழுதான்
தன்னையும் மீறி
மனிதன் ஆற்றும்
இழிவான உணவுற்பத்தியினால்
கோபமுற்று உஷ்ணமாகின்றான்
தேரில் இருந்து எழ எழ
எத்தனித்து....
எழுந்து, எழுந்து....
விழுந்து, விழுந்து...

விழந்தது!
காலைத் தினசரியில்
ஒரு கண்ணீர்ச் செய்தி
வயல் வெளியோரம்
பிரகாசமான ஆண்
அழகனொருவன்
இறந்து கிடந்தான்
பொலிஸார் இவன்
சூரியனே என
சந்தேகிக்கின்றனர்

வெள்ளை மேகங்கள்
வானில் மெல்லக் கடந்து போயின
கவிஞனின் மயக்கம் தீர்ந்தது
அவன் எழுந்து நடக்கின்றான்
தூரத்தில் செந்நிறத்தில் வட்டமாய்
அது சிலேடையாய்ச் சிரித்தது
விவசாயியைப் பார்த்து..

V.K.ரவிகரன்
ஆசிரியர்
புனித பத்திரிசியார் கல்லூரி

## பொங்கிப் பொலியட்டும்...



பொங்கட்டும் பொங்கட்டும்
இல்லங்கள் மகிழ பொங்கட்டும்
தங்கட்டும் தங்கட்டும்
தரணி எங்கும் அமைதி தங்கட்டும்
வெல்லட்டும் வெல்லட்டும்
மனிதாபிமானப் பணிகள் வெல்லட்டும்
சொல்லட்டும் சொல்லட்டும்
உண்மைகள் உரத்து உலகுக்கு சொல்லட்டும்
உண்ணட்டும் உண்ணட்டும்
உழைத்து வாழ்வோரே உண்ணட்டும்
செய்யட்டும் செய்யட்டும்
சேவை மனம் கொண்டவரை தெரிவு செய்யட்டும்
களையட்டும் களையட்டும்
கயவர்கள் கெடுபிடிகள் களையட்டும்
காக்கட்டும் காக்கட்டும்
பண்பாட்டு விழுமியங்கள் காக்கட்டும்
செல்லட்டும் செல்லட்டும்
பொறுப்புள்ளோர் பொறுப்பேற்க செல்லட்டும்
பகிரட்டும் பகிரட்டும்
பசித்தோர் வாழ்வு மறை பகிரட்டும்
மலரட்டும் மலரட்டும்
மழலைகள் எதிர்காலம் மலரட்டும்
வாழ்த்தட்டும் வாழ்த்தட்டும்
ஆன்மீகம் தழைத்தோங்க வாழ்த்தட்டும்

செ.யோசப்பாலா
உளசமூக சிறாஜன்

## இ(சி)றக்காத பொங்கல்



பொங்கலோ... பொங்கல்...
பத்து ஏக்கர்
நிலப்பரப்பை உழுது
பதம் பதமாய் நெல் விதைத்து
வீர நடைபோட்டு
உழைப்பவர் கூட
உழைப்பாளியாய் நின்று
உச்சி வெய்யில் குளிர
அரிவாளால் அறுவடை செய்து
சொந்த மண்ணில்
மண்ணெடுத்து பானை செய்து
சொந்த நெல்மணிகள்
சொந்த பானையில்
சொந்த மண்ணில் கோலமிட்ட காலம்...

பொங்கல் சுவைபிக்க பொங்கல்
சுற்றத்தாரின் பாச உறவு
பொங்க ஏங்கி வழியுது பொங்கல்

அந்த அருமை பெருமை அங்கே...?
இப்போ இங்கே...?

அந்நிய மண்ணில்
ஆதிக்கத்தில் பொங்கினோம் பொங்கல்
மனம் நிறைந்தால் தான் பொங்கல்
பானை நிறைந்தால் பொங்கல் அல்ல
பலாலி மண்ணை விட்டுக் கிளம்பி
பதினொராவது மண்ணையும் தாண்டி
கால் நடையாகி யாழ் மண்ணில்
கால் பதித்து முப்பது வருடங்கள்
முப்பது பொங்கல் பொங்கியும்
சொந்த மண்ணில் பொங்காத பொங்கல்
என் மனதிற்குள் குமுறுகின்ற பொங்கல்
பொங்கி வழியுது ...
இறக்கிவைக்க முடியுமா...?

S.B.சிறாஜ் லோஸ்
யாழ்ப்பாணம்

# கலாபூஷண விருதுபெற்ற கத்தோலிக்க கலைஞர்கள்

இலங்கைக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைத்துறையின் வாழ்நாள் சாதனைக்காக வருடந்தோறும் தேசிய ரீதியாக வழங்கப்படுகின்ற உயர் விருதாகிய 'கலாபூஷணம்' விருதினை கடந்த 2017 ஆண்டு யாழ் மறை மாவட்டத்தினைச் சேர்ந்த நான்கு கத்தோலிக்க கலைஞர்கள் பெற்றுக்கொண்டார்கள். கடந்த டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி கொழும்பிலுள்ள தாமரைத்தடாக அரங்கில் இலங்கை ஜனாதிபதி மேன்மைதங்கிய மைத்திரிபால சிறிசேன அவர்களால் இவ்விருதுகள் வழங்கப்பெற்றன.

வாழ்நாளில் மேற்கொண்ட கலைச்சேவைக்காக வழங்கப்படுகின்ற மேற்படி விருதினை பெற்றுக்கொண்ட கலைஞர்களை கலைக்காவலன் பெருமையுடன் வாழ்த்தி நிற்பதுடன் அவர்கள் பற்றிய சிறிய அறிமுகத்தினையும் இக்கட்டுரையில் பதிவுசெய்கின்றது.

### எழுத்தாளர் யோசப்பாலா (செபஸ்தியாம்பிள்ளை யோசப்)



யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த 'யோசப்பாலா என்ற புனைபெயருடன் எழுதிவரும் இவர் இலக்கியத்துறையில் அதிகம் அறியப்பட்ட ஒருவர். சமயம், இலக்கியம், உளவியல் என்ற துறைகளில் தனது நாட்டத்தினைக் காட்டி வரும் இலக்கியவாதியாகிய இவர் சிறுகதை கவிதை கட்டுரைகள் என்று பல்வகைமைகளான ஆக்கங்களைப் படைத்து வருபவர்.சமூகப்பிரக்ஞையுடன் இலக்கியம் படைத்துவரும் இவர், சமூகச் செயற்பாட்டாளராய், உளவியலாளராய் பல்வேறு பணிகளையும் ஆற்றி வருகின்றார். சமூக உளவியல் சார்ந்ததாகவே இவரது ஆக்கங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

'நான்' என்னும் உளவியல் சஞ்சிகையின் இணை ஆசிரியராக நீண்டகாலமாக பணியாற்றி வருவதுடன் 'பாதுகாவலன்' 'புதிய உலகம்' போன்ற பல பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் எழுதி வருகின்றார். 'உணராத உண்மைகள்', 'திருப்பம்', 'தரிசனம்', முதலிய சிறுகதைத் தொகுப்புக்களையும் 'மகிழ்ச்சியின் இரகசியம்', 'உளம் மகிழ', 'உளமார' போன்ற உளவியல் நூல்களையும் வெளியிட்டுள்ளார். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் செயலாளராகவும் சேவையாற்றும் இவருக்கு இலக்கியத்துறைக்கான 'கலாபூஷணம்' விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




### அண்ணாவியார் பத்திநாதன் பாக்கியநாதர்



ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனையைச் சேர்ந்த இவர் கலைக் குரிசில் அந்தோனியின் கலைப்பரம்பரையில் தோன்றியவர். தென்மோடி நாட்டுக்கூத்து மரபுக் கலைஞராகிய இவர் பல்வேறு கூத்துக்களில் நடித்தும் நெறிப்படுத்தியும் வந்துள்ளார்.

'அலசு', 'ஞானசௌந்தரி', 'புனித அந்தோனியார்', 'பிரகாச ராணி, 'பிலோமினம்மா, தேவசகாயம்பிள்ளை', 'பிரான்சீஸ் அசீசியார்' போன்ற பல கூத்துக்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். 'இராஜபாட்' என அழைக்கப்படுகின்ற அரச பாத்திரங்களை நடித்து பலராலும் பாராட்டப்பட்டுள்ளார். மற்றும் 'தொன்நீக்கிலர்', 'பிலோமினம்மா', 'பார்பரம்மாள்' போன்ற பல கூத்துக்களை இயக்கியும் மேடையேற்றியுமுள்ளார்.பாடசாலைகளிலும் பல்வேறு கூத்துக்களை மாணவர்களுக்கு நெறிப்படுத்தி வந்துள்ளார். நாடகத் துறை சார்ந்து இவருக்கு 'கலாபூஷணம்' வழங்கப்பபெற்றது.

### அண்ணாவியார் யாக்கோப்பு இம்மானுவேல்

இவர் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையைச் சேர்ந்தவர். கலைக்குரிசில் அந்தோனியின் கூத்துப் பாரம்பரியத்திலேயே தோன்றியவரான இவரும் இக்கிராமத்தின் கூத்துப் பாரம்பரியத்தில அதிகம் மதிபக்கப்படுபவர். சிறுவயதில் இருந்தே நாட்டுக்கூத்துறையில் ஈடுபட்டு வந்துள்ளார். 'புனித கிறிஸ்தோப்பர்', 'இருசகோதரர்கள்', 'ஊசோன் பாலந்தை', 'கண்ணொளி கொடுத்த காரிகை', 'தேவசகாயம்பிள்ளை', 'ஞானசௌந்தரி', 'ஞானானந்தன்', போன்ற பல கூத்துக்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். 'இராஜபாட்', 'சரித்திரகாரன்' என பல வகைப்பாத்திரங்களையும் நடித்துள்ளார். தனது கிராமத்தில் மட்டுமன்றி ஊர்காவற்றுறை, அனலைதீவு, குருநகர் போன்ற இடங்களிலும் கூத்தினை நெறிப்படுத்தி அரங்கேற்றியுள்ளார். இவர்கள் இருவரும் உறவினர்களாகவும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. நாடகத் துறை சார்ந்து இவருக்கு 'கலாபூஷணம்' வழங்கப்பபெற்றது.



### அந்தோனிப்பிள்ளை யோசப்

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறந்த காண்பியக்கலைஞராவார். சிறிய வயதில் 'படைவெட்டு', 'இருவர் உள்ளம்', 'பரமபிதா' போன்ற நாடகங்களில் நடித்தும் கிராமிக்கலையான 'அம்பா' போன்றவற்றினை நெறிப்படுத்தியும் வந்தவராகிய இவர் பிற்பட்ட காலத்தில் தன்னை சிறந்த 'காண்பிய, தொழில்நுட்பக் கலைஞனாக' வளர்த்துக்கொண்டார். சிறந்த காட்சி விதானிப்பாளனாகவும், அரங்கின் ஒளி,ஒலி விதானிப்பாளனாவும் திகழ்ந்து வருகின்ற இவர், அருட்பணி நீ.மரியசேவியர் அடிகளின் ஊக்கத்தினால் கலைப்பணியில் இணைந்து கொண்டவர். குறிப்பாக திருமறைக் கலாமன்றத்தின் பிரமாண்டமான பல நாடகங்கள், திருப்பாடுகளின் காட்சிகள் என்பவற்றுக்கு காட்சிவிதானிப்பாளனாக கடந்த 20 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருகின்றார். திருப்பாடுகளின் காட்சிகளில் இன்றியமையாத கூறாக விளங்குகின்ற காட்சி விதானிப்பானது மிகவும் சிரமம் மிக்கபணியாகும். இவர் அதனை தனது விருப்புக்குரிய பணியாகத் தேர்ந்து அத்துறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றுள்ளார். கடந்த காலங்களில் திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சிகளின் 'காட்சிவிதானிப்பானது'பலராலும் பாரட்டப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி ஒளிவிதானிப்பு, ஒலிவிதானிப்பு என அரங்கின் துணைக் கலைகளைப் படைப்பதிலும் அனுபவம் மிக்கவராகிய இவர் இவற்றிற்கு அப்பால் திருமறைக்கலாமன்றத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்து கலைச் செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்து வருகின்றார். நாடகத்துறை சாரந்ததாக இவருக்கு கலாபூஷணவிருது வழங்கப்பெற்றது.



### கூத்துக்கலை

தமிழர்களின் பாரம்பரிய நாட்டர் கலை வடிவங்களில் ஒன்று. கிராமத்தின் மண் வாசனையையும், கிராம மக்களது வாழ்வாதாரங்களையும், அவர்கள் மதம் மீது கொண்ட பற்றுதலையும் வெளிப்படுத்தும் வகையில் அமைவது கூத்துக்கலை. கூத்துக்கள் பல்வேறு செய்திகளை சமூகத்திற்குச் சொல்கின்றன. முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் பொழுதுபோக்கிற்காகவும், தங்களது களைப்பைப் போக்கும் செயற்பாடாகவும் ஒரு முற்றத்தில் ஒன்று கூடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அதுவே நாளடைவில் பல்வேறு பரிணாமங்களைப் பெற்று கலைகளாகத் தோற்றம் பெற்றது. அவர்கள் அன்று பொது முற்றத்தில் ஆடியவை இன்று கூத்து என்ற பெயரைப் பெற்று வளர்ந்து நிற்கின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இந்தக் கூத்துக்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் இந்தக் கூத்துக்களின் கதையம்சமும், கூத்துக்களினூடாக கூறப்படும் செய்திகளும் தற்போதைய சமூகத்தினரையும் ஈர்ப்பவையாக அமைந்துள்ளன.

"ஈழத்துக் கூத்தின் வரலாற்றை எடுத்து நோக்கும்போது, கூத்தின் புத்தாக்கத்தில் இரண்டு சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. ஒன்று மீள் கண்டுபிடிப்பு. இன்னொன்று மீளுருவாக்கம். 60 களில் இம்மீள் கண்டுபிடிப்பு நடைபெற்றதாகவும், பின்னர் இது மீளுருவாக்கம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது." "மீளுருவாக்கம்" என்ற சொற்றொடரை இன்று கையாள்வபர் அதன் ஒற்றை அர்த்தத்தில் கையாளுகின்றனர். கூத்தை அப்படியே பேண வேண்டும் என்பர் சிலர். கூத்தை சமூகப் பின்னணியில் இருந்து பிரிக்காமல் உருவாக்க வேண்டுமென்பர் சிலர். அதன் அழகியலை மீள் கண்டுபிடிப்புச் செய்து புத்துருவாக்கவேண்டும் என்பர் சிலர். எதுவாக இருப்பினும் தமிழர் தம் கூத்துக்கலை மேம்பட உழைப்பது நம் கடமை.

### இறையருளை நாம் பெறுவோம்

இலங்கை நாட்டின் திருத்தூதர்
புனித யோசவ் வாஸ் முனிந்திரன்
எமது மண்ணிற்குக் கிடைத்த
மாபெரும் கொடை
கோவையில் பிறந்து
இறையுறவில் வளர்ந்து
இறைவனின் குருவாகி
எம் நாட்டில் காணப்பட்ட
விசுவாச வறுமை கண்டு
சுய விருப்போடு
தடைகள் பலதாண்டி
கழுத்திலே செபமாலை
கையிலே பிச்சைப்பாத்திரம்
இரப்பவனைப்போல் வேடமிட்டு
இங்கே வருகை தந்தார்

கிறிஸ்துவின் கல்வாரி
இவர் வாழ்வில் நிறைந்திருந்தும்
எதற்குமே அஞ்சாது
இறை பணிகள் ஆற்றி நின்றார்
எட்டப்பர் கூட்டம்
உடனிருந்து கருவறுக்க
ஆட்சியாளர் கெடுபிடிகள்
பணிகளுக்குத் தடை விதிக்க
துணிவோடு இறையாட்சி
அறிவித்து பெருமை கண்டார்
இறைமகன் கிறிஸ்துவின் மேல்
தான் கொண்ட நம்பிக்கை
தளராது காத்து நின்று
அற்புதங்கள் பல செய்தார்
செபத்தின் வல்லமையால்
மகப்பேறு கிடைக்கவும்
வறட்சி நிலைகண்டு
மழை பொழியச் செய்யவும்
திருச்சிலுவை மகிமையால்
வனவிலங்கு ஓடவும்
இறையருள் கொண்டிருந்தார்
தீராத நோய் கண்டு
மீண்டெழுந்து வந்ததோடு
துன்புற்ற மாங்களுக்கு
துணையாக நின்றிருந்தார்
செபமாலைப் பக்தி கொண்டு
மறைவிடத் திருப்பலிகள்
மக்களுக்காய் நிறைவேற்றி
ஆசீர் அளித்து நின்றார்.

சிலுவைகள் பல சுமந்தும்
சிறைக்கூட வாழ்வு கண்டும்
உத்தமரைக் கொலை செய்ய
கயவர்கள் தேடிய போதும்
அஞ்சாது திடத்தோடு
இறைபயியில் வெற்றி கண்டார்
அவர் காத்த எம் மண்ணில்
விசுவாச ஒளி தனையே
சாட்சிய வாழ்வுகளால்
அணையாது காத்து நிற்க
எம் புனிதர் பரிந்துரையால்
இறையருளை நாம் பெறுவோம்.

### மனதிலும் பொங்குவோம்

பொங்குக தமிழ்ப் பொங்கல்
அதிகாலைப் புதுச் சூரியனுக்கு
மனதிலும் பொங்குக
மனம் என்றும்
அமைதியில் நனைந்திட

தரணியில் நீதியொளி
பிரகாசித்திடப் பொங்குக...
வாழ்வியல் துன்பங்கள் ஓய்ந்திட
கொலைகள் மறைந்திட
மக்கள் அமைதி பெற்றிட
நீதி தாங்கி சமாதானம்
நாட்டில் நிலைத்திட
நலிவுற்றோர் துன்புற்றோர்
நலமே எல்லாம் பெற்றிட
நவமே பொங்குக
மனதிலும் பொங்குக...

அ.றொக்ஷன்
புனித பத்திரிசியார் கல்லூரி

# அவசியமற்ற அவசரம்

சிறுகதை



விடிகாலை அந்தோனியார் கோவில் திருந்தாதி மணியோசை மரியம்மாவின் நித்திரையைக் கலைத்தாலும் அவளால் படுக்கையை விட்டெழ முடியவில்லை. முதல்நாள் மணியக்காவின் வீட்டில் மா இடித்து களைத்து வந்த அவளின் இளைப்பு இரவு உறக்கத்தின் பின்னும் அவளை விட்டுப் பிரியவில்லை.

"ம்..... நந்தவனமாக செழிக்கும் என நம்பியிருந்த வாழ்க்கை பாலைவனமாக மாறுமென்று நான் நினைக்கேல. கும்பிட்ட கடவுள் எல்லாம் கைவிட்டிட்டினம்." என நினைத்து பெருமூச்செறிந்த மரியம்மா,

"தம்பி சுதன், என்னாலை ஏலாமல் கிடக்கு குடிக்க எப்பன் கோப்பி ஊத்தித்தாவன்"

இதைக் கேட்டதும் நித்திரைப் பாயில் பலகற்பனையில் புரண்டுகொண்டிருந்த சுதன் பாம்புபோல சீறியெழுந்தான்.

"என்னால உதொண்டும் செய்யேலாது. எனக்கு இன்டைக்கு ஒரு முடிவு வேணும்" எனக் கத்தினான்.

மரியம்மாவுக்கு சப்த நாடிகளும் அடங்கியது. ஒரு கணம் தன் வாழ்க்கையை பின்னோக்கித் திரும்பிப் பார்த்தாள். ஆம்! 18 வருடங்களுக்கு முன் காணிக்கைராசாவைக் கரம்பிடித்து இல்லறச் சோலையில் நறுமண மலர்களாக பெண் குழந்தையையும், ஆண் குழந்தையையும் மலரச்செய்து விட்டு காணிக்கைராசா யுத்தத்தில் தன்னைப் படைத்தவனுக்கே காணிக்கையாகி விட்டான். பெண்மைக்கு வரும் பேராபத்துக்களில் இருந்தெல்லாம் தன்னை விடுவித்தவளாக கூலி வேலை செய்து தன் பிள்ளைகளை பராமரித்து வந்த மரியம்மா தன் பெண் பிள்ளையை பாதுகாப்பு கருதி சிறுவர் இல்லமொன்றில் சேர்த்து உயர் கல்வியைத் தொடர வைத்தார். தன் மகனை தன்னோடு வைத்திருந்து க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் அவனைச் சித்திபெறச் செய்து உயர் கல்வி கற்கும்படி கூறியிருந்தாள். தன் மகனை வேலைக்கு அனுப்பவேண்டும் என்று அந்தத் தாய் உள்ளம் ஒரு போதும் விரும்பவில்லை. தன்பிள்ளைகளின் வருங்காலத்திற்காக தன் உடலை வருத்தி, மாவிடித்து, நெல்லுக்குற்றி, வயல்களில் வேலை செய்து உழைத்து வருகிறாள்.

இவ்வாறு தன் கடந்தகால வாழ்க்கையை கண்மூடிக்கொண்டு தியானித்த அவளுக்கு "எனக்கு இண்டைக்கு ஒரு முடிவு வேணும்" என்ற மகனின் குரல் காதில் மீண்டுமொரு தடவை எதிரொலித்தது. "தம்பி ஏதுக்கடா உனக்கு இண்டைக்கொரு முடிவு வேணும்" எனக் கேட்டாள். மகனிடமிருந்து வார்த்தைகள் தெறித்தன.

"நான் இப்ப ஓல் பாஸ் பண்ணிட்டன். ஏ.எல் படிக்கிறதென்டா எனக்கு ஐபோனும், லப்டப்பும் வேணும்".

மரியம்மா ஒரு கணம் அதிர்ந்து போனாள். "மகனே அதுக்கு நான் இப்ப எங்க போறது, கூலி வேலை செய்துதான் நாங்கள் வயித்தைக் கழுவுறம்.. நீ கேக்கிற உந்த ......"

தாய் கூறிமுடிப்பதற்குள் "எனக்கு அந்த இந்தக் கதை ஒண்டும் வேண்டாம். எனக்கு நான் கேட்டது வேணும். இல்லையென்டால் படிக்கமாட்டன்" என்று அவன் ஒற்றைக்காலில் நின்றான்.

"தம்பி! நீ படிக்கிறது உன்ர எதிர்காலத்திற்காக, எனக்காக இல்ல. அப்பாவும் இல்ல, நான் வயசுவந்தவுடன் எங்கையென்டாலும் முதியோர் இல்லத்துக்குப் போயிருவன். பிள்ளையையும் சேர்க்க வேணுமெண்டு இடத்தில சேர்த்திருக்கிறன். கஷ்டப்பட்டு போறது நீ தான்".

"எனக்கு உந்த உபதேசங்கள் ஒண்டும் வேண்டாம். நான் கஷ்டப்பட்டாலும், நஷ்டப்பட்டாலும் எல்லாம் என்னோட. எனக்கு இப்ப முடிவு வேணும்.

தம்பி! உன்ர சிநேகிதப் பெடியன் சசியைப் பாரன். அவன் உதுகள் எல்லாம் வச்சிருக்கிறானே! எந்த நேரமும் புத்தகமும் கையுமா இருக்கிறான்.

அவனுக்கு இதொன்றும் விளங்காது. அதெல்லாம் சரிவராது. அப்பிடியெண்டா நீங்க அவனக் கூப்பிட்டு வச்சிருங்கோ. நான் எங்கையெண்டாலும் போய்த் துலையிறன்.

சரி! நிப்பாட்டு. எங்கட அவசரத்துக்கெண்டு என்னட்ட கொஞ்ச நகை மட்டும் தான் கிடக்கு, அதக்கொண்டு போய் வித்துப்போட்டு ஐபோனையும், லப்பையும் வேண்டு.

தாயின் நகை விற்ற கணத்தில் தனக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு சுதன் ஆத்ம திருப்தி அடைந்தான். இரண்டு மூன்று வாரங்கள் இப்படியே ஓடியது. வகுப்புக்குப் போகும் சிந்தனையை மறந்தவனாக நவீன தொழில்நுட்பத்துக்குள் அவனும் தன்னை நவீனத்துவம் ஆக்கிக் கொண்டான். திடீரென்று அவனுக்கு மற்றுமொரு ஆசை பற்றிக்கொண்டது. அதுதான் மோட்டார் சைக்கிள் வேண்ட வேண்டுமென்ற புதிய ஆசை.

எப்படியென்றாலும் அதனையும் தன் தாயிடமிருந்து பெற்றுவிட அந்த இளம் உள்ளம் தவித்தது. தாய் பணம் இல்லை என்று சொல்லுவாள் அது அவனுக்குத் தெரிந்திருந்தாலும் அதைப் பற்றிச் சிந்திக்கும் நிலையில் இப்போது அவன் இல்லை. நண்பர்களின் சேர்க்கையோ உள்ளத்தில் ஏற்பட்ட திருப்பமோ யாருக்குத் தெரியும்?

அன்று மாலை வயலில்வேலை செய்துவிட்டு தாய் வந்த கையுடன் தன் விருப்பத்தை சுதன் தாயிடம் தெரிவித்தான். "என்ர ராசா மோட்டார் சைக்கிள் வேண்டுறதுக்கு நான் எங்கபோறதுஉந்த வீட்டையும் காணியையும் வித்துக் போட்டு நடுத்தெருவில் நிண்டுதான் மோட்டச்சைக்கிள் வேண்டித் தரவேணும்" என்று தாய் கூறவே, "வீடும் காணியையும் விற்கத் தேவையில்ல ஈடு வைச்சு எனக்கு வேண்டித்தாங்கோ" என சுதன் தாய்க்கு ஒரு யோசனை கூறினான். இப்படியெல்லாம் தன் மகன் மாறுவான் என அந்தத் தாய் கனவில்கூட நினைக்கவில்லை. மகனின் இந்த வார்த்தை அவள் உள்ளத்தை உடைத்தது. சுதன் தானா இப்படிக் கதைக்கிறான் என ஒரு முறை அவனை ஏற இறங்க பார்த்துவிட்டு கண்ணீரோடு போய் அந்தத் தாய் அடுப்பங்கரையில் அமர்ந்தாள்.

"சரி.. சரி.. நீ அழவேண்டாம். மோட்டார் சைக்கிள் வேண்டுற வழி எனக்குத் தெரியும்" என்று கூறிவிட்டு விறுக்கென்று வீட்டைவிட்டுவெளியேறினான் சுதன்.

இரவு வந்தது திரும்பி வந்த சுதனை ஒருவித பரிதாபத்தோடு தாய் பார்த்தாள். "நாளைக்கு நான் வேலைக்குப் போறன். நான் உழைச்சு எனக்குத் தேவையானத வேண்டுவன்." என அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து போன மரியம்மா. "நான் உன்ன படிக்கச் சொல்லித்தான் கேட்டனான். என்ர உடம்பு உருக்குலைச்சு எண்டாலும் உன்ர படிப்புச் செலவுக்கு காசு தருவன்." என அந்தத் தாய் உள்ளம் கூறியது.

"எனக்கு உந்த படிப்பு, பட்டம் ஒண்டும் வேண்டாம். இந்த வயசில சந்தோசமாய் இருக்காட்டி, பிறகு எந்த வயசில சந்தோசம் இருக்கும். நான் வேலைக்குப் போற முடிவில மாற்றம் இல்ல" என அவன் இரைந்தான்.

அந்த இரவு தாய்க்கு கண்ணீரில் கரைந்தது. விடிந்ததும் சுதன் தேனீரும் பருகாமல் வேலைக்குப் போய்விட்டான். வேலைக்கு சுதனை அழைத்தவன் சுதனிடம் ஒரு பொதியைக் கொடுத்து, தான் சொல்லும் முகவரியில் அதனை சேர்ப்பிக்கும்படி கூறினான்.

சுதனும் அந்தப் பொதியை எடுத்துக்கொண்டு அவன் கூறிய முகவரியைத் தேடி வீதி வீதியாகத் திரிந்தான். அந்த நேரம் வீதியில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்த காவற்துறையினர் சுதனை அழைத்து விசாரித்தனர். தனக்கு ஒரு முதலாளி இந்தப் பொதியைத் தந்து அதனைக் குறிப்பிட்ட முகவரியில் சேர்க்கும்படி கூறி அனுப்பியதாகவும், தான் முகவரி தேடி அலைவதாகவும் கூறினான்.

காவல்துறையினர் அவனிடம் இருந்த அந்தப் பொதியை பரிசோதனை செய்தபோது, அந்தப் பொதியினுள்........ அவர்கள் மட்டுமல்ல சுதனும் கூடத் தான் அதிர்ந்து போனான். சுதனைக் கைது செய்த காவல்துறையினர் காவற் பணிமனைக்குக் கொண்டு சென்றனர். விசாரணை ஆரம்பமானது ஒருவர் பின் ஒருவராக சங்கிலிக் கோர்வையாக ஒரு மணித்துளிக்குள் பலர் கைதாகினர். சுதனில் தவறில்லை என்பதை காவல்துறையினர் தெளிவாகக் கண்டுகொண்டாலும், அவனை அடைத்து வைத்துக்கொண்டு அவன் தாய்க்கு செய்தி அனுப்பினர்.

மரியம்மா பூமியே பிளந்து விழுங்கினதுபோல அதிர்ச்சிக்குள்ளானாள். "என் மகன் கஞ்சா கடத்தினானா?" என தன் நெஞ்சில் தானே அடித்து அடித்து கதறி அழுதாள். அயல் வீட்டார் அவளை ஒருவாறு சமாதானப்படுத்தி, காவற்பணிமனைக்கு அழைத்துச்சென்றபோது,

தெருவைக் கடக்க முயன்ற மரியம்மாவை வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று மோதித் தள்ளியது. அக்கணமே அவள் மூர்ச்சையுற்றாள். அயலவர்கள் அவளை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். செய்தி அறிந்த காவல்துறையினர் சுதனை விடுவித்தனர்.

வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த தன் தாயை சுதன் பார்க்கச் சென்றான். இரத்தக் கறைகளுடன் அசையாது கட்டிலில் கிடந்த தாய்க்கருகில் அவனும் சிலையாக நின்றான்.

விளக்கில் விழுந்த விட்டில்களாக இப்படித்தான் இன்று எத்தனையோ இளைஞர்கள் தம் வாழ்க்கையை சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். அன்று உதிரத்தைச் சிந்தி தன் மகனை வளர்த்த அந்த விதவைத்தாய் இன்றும் அதே உதிரத்தைச் சிந்தி அவன் களங்கத்தை துடைக்கின்றாள். அவசியமற்ற அவசரங்கள் அபசுரங்களாக அரும்ப சுதன் வெளியே வருகிறான். அந்நேரம் அந்தி வானில் இருளுக்கு மத்தியில் நட்சத்திரங்கள் பூக்கத் தொடங்கின. அவை வானில் மட்டுமல்ல. அவன் வாழ்க்கையிலும் தான்.

**வசீகரன்**

# முதிர்ந்த முத்துக்கள்

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தனை வணங்க" பரந்து விரிந்த இப்பாரிய உலகிலே இறையோன் அற்புதமானதும், ஆற்றலுள்ளதும், வியக்கத்தக்கதுமான அளப்பரிய படைப்புக்களை ஒரு வார்த்தையினால் உருவாக்கினான். தாம் படைத்த ஒவ்வொருபடைப்பையும் உற்றுநோக்கி நன்று நன்று எனக் கூறிய இறைவன் தமது சாயலாகவும், பாவனையாகவும் மனிதனைப் படைத்துவிட்டு அப்படைப்பு மிகச் சிறந்தது என்று பூரிப்படைந்தார். இந்த வகையிலேயே அனைத்துப்படைப்புக்களையும் விட மனிதன் மேலானவன். உயர்ந்தவன். சிறந்தவன் என்று கணிக்கப்பட்டான்.

மண்ணகத்தில் மனிதனாக உருப்பெற்றவன் காலங்கள் புரண்டோட பருவத்திற்குப் பருவம் குழந்தையாக, சிறுவனாக, இளைஞனாக இறுதியிலே முதியோனாக மாற்றம் காண்கின்றான். முதுமை எப்பொழுது ஆரம்பிக்கின்றது என்பது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் இருப்பினும், 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் மூத்தோர் எனக் கணிக்கப்பட வேண்டும் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். உலகில் மூத்தோரின் எண்ணிக்கை, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்ததை விட இன்று பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஆசியாவில் யப்பான், சீனா ஆகிய நாடுகளிற்கு அடுத்தபடியாக மூத்தோரின் தொகை அதிகளவிலுள்ள நாடாக இலங்கை காணப்படுகின்றது.

கடந்து வந்த பாதையிலே முதியோர்கள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடிகளிலும் அவர்கள் மேற்கொண்ட சவால்கள், சஞ்சலங்கள், ஏமாற்றங்கள், ஏற்றத்தாழ்வுகள் எத்தனை எத்தனை? தமது கடந்த கால வாழ்விலே புரிந்து வந்த சாதனைகள் முதியோனாகி விட்டபின்பு அத்தனையும் மறக்க முடியுமா? குடும்பம் எனும் குவலயத்துள் கணவனாக, மனைவியாக, ஈன்றெடுத்த குழந்தைச் செல்வங்களுடன் ஆழமான உறவு கொண்டு தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவர்களுக்கே அர்ப்பணித்துள்ளனர்.

மேலும் குடும்பத்தின் குல விளக்காக தம்மைத் தியாகம் செய்த இவர்கள் தம் தியாக வாழ்வினால் எரியும் திரியாக, அரைக்கும் சந்தனமாக அளித்து, அழித்து தன் குடும்பத்தின் எதிர்கால வாழ்விற்காக தன்னை உரமாக்கி விடுகின்றான். முதுமை என்பது படித்தவன், பாமரன், ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி எல்லோருக்கும் பொதுவானது. தமது மக்கள் தம்மைத் தாங்குவார்கள் என்ற எதிர்கால கனவுடன் முதுமையை அடையும்போது அவர்களுக்கு நிகழ்வது தான் என்ன?

ஆழ்கடலில்தேடிப்பெற்றசிப்பியை உடைத்து முத்தைப்பெற்ற பின் சிப்பியை தூர வீசுவதுபோல யதார்த்த உலகம் முதியோர்மூலம் பெற்ற நன்மைத்தனங்களைப் புறக்கணித்து வருவது யாம் அறிந்த உண்மை. முத்து முத்தான முதியோரை குப்பையென வீசும் இந்நிலை மாறவேண்டும். மனிதம் மறைந்து மனித நேயம் புதைக்கப்பட்டு வரும் இக்காலத்தில் முதியோரின் மகத்துவத்தைப் போற்ற முன்வருவோம். அவர்கள் உள்ளத்திலே துயருறுவதும், கவனிப்பாரற்ற வெறுமை வாழ்வு வாழ்வதும் அவர்களுக்கு இல்லாது ஒழிய வேண்டும்.

நிறைவாக முதியோர்களிடமிருந்து நாம் பெற்றுக்கொண்டதும், கற்றுக் கொண்டதுமான அனைத்துநன்மைகளையும் நன்றியுடன் நினைவு கூருவோம். நாம் முழுமனிதராவதற்கு மூத்தோர்கள் நம் வாழ்வில் புரிந்த ஒவ்வொரு சிறிய செயல்களும் எதிர்கால வாழ்வை மிளிர்விக்கின்றது என்றால் அது மிகையாகாது.

"ஒரு முதியவர் இறக்கும் பொழுது ஒரு நூலகமே எரிகிறது" (ஆபிரிக்க பழமொழி)

**தவப் குருசுமுத்து (நவாலி)**



# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

### ஆயர் பெற்றக்கீனி குடா நாட்டில் இல்லாதபோது நடைபெற்ற நிகழ்வுகள்

வடமராட்சியிலுள்ள பருத்தித் துறைப்பகுதியில் 1852ல் இருந்தே சில சிக்கல்கள் கரவெட்டியில் தோன்றியிருந் தன. 1855ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பங்குத்தந்தையாகிய மோக்கல் (Moukel) அடிகள் கணிசமான தொகையினர் வதிரி. புலோலி அல்லது கரவெட்டிக்கு ஒரு பிரி வினைவாதக் குருவை கொண்டுவந்து இருத்தப் போகின்றனர் என்ற அச்சத்தைக் கொண்டிருந்தார். இந்நாட்களில் மோக்கல் அடிகள் எழுதிய கடிதங்களில் கோவா பிரிவினைக்குருவாகிய ஜோவாவோ அடி கள் எந்நேரமும் வந்திறங்கலாம் என்ற அங்கலாய்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

இறுதியில் 1855ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ம் திகதி அவர் எழு திய கடிதத்தில் ஜோவாவோ அடிகள் மேளதாள வரவேற்புடன் கரவெட்டியில் வந்திறங்கினார் என்று குறிப்பிட்டார். இவர் முன்னர் இங்கு பணியாற்றியமையால் இவருக்குக் கரவெட்டியில் அனுதாபிகள் இருந்தனர். சில வருடங்களுக்குமுன் வடமராட்சியிலுள்ள பல ஆலயங்களுக்குப் பொறுப்பான ஒரட்டோரியன் சபைக்குரு இங்கு தங்கியிருந்த காலத்தில் இம்மக்கள் திருப்பலி மற்றும் திருவருட்சாதனங்களை அடிக்கடி அணுகக்கூடியதாயிருந்தமையும் தற்போதும் இக்குருவின் பணியாட்கள் இருவர் முன்னரே கரவெட்டி சென்று முன் னர் போல் ஒரு குரு தங்கியிருந்தால் பழையபடி தமக்கு மேற்படி அனுகூலங்கள் கிடைக்குமென்று கூறி மக்கள் ஆதரவைத் திரட்டுவதில் வெற்றி கண்டுமிருந்தனர். கரவெட்டியில் அரங்கேறிய பிரிவினை கணிசமானளவு காலம் நீடித்தது! ஆயினும் வட (யாழ்ப்பாண) திருத்தூது மறைமாவட் டத்தின் மற்ற இடங்களில் பிரிவினையின் தாக்கம் வேகமாகக்குறைந்து கொண்டு வந்தது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் கணிசமான குடும்பங்களும் மடுத்திருப்பதி உட்படக்கணிசமான ஆலயங்களும் அமல மரித்தியாகிகள் சபைக்குருக்களால் பிரி வினைவாதக் குருக்களின் பிடியிலிருந்து மீட்டெடுக்கப்பட்டன.

எனினும் ஆயர் பெற்றக்கீனியின் காலத்தில் பிரிவினை பிரச்சனை முற்றாக நீங்கவில்லை. அடிக்கடி மக்களை வாட்டி வந்த வாந்திபேதி மற்றும் நோய்த்தாக் கங்கள் அவற்றினால் ஏற்பட்ட உயிரிழப் புக்கள் மத்தியில் துணிவுடனும் அர்ப்ப ணிப்புடனும் பணியாற்றிய குருக்களின் குறிப்பாக ஐரோப்பாவில் இருந்து வந்த அமலமரித் தியாகிகளின் பணியாலும் அதுவரை கோவாப்பணி பிரிவினைக்குருக் களை ஆதரித்து வந்த மக்கள் ஆயர் பெற்றக்கீனி அவர்களும் அவரைத் தொடர்ந்து வந்த திருத்தூது முதல்வர் களையும் ஆயர்களையும் தமது ஆயர் களாகவும் ஆன்மீக வழிகாட்டி களாகவும் ஏற்றுக்கொள்ளத் துவங்கினர்.

### ஆயர் பெற்றக்கீனியின் யாழ் மீள்வருகை

இரண்டு வருட இடை வெளிக் குப்பின் ஆயர் பெற்றக்கீனி யாழ்குடா நாட்டுக்கு 1855 ஆகஸ்டில் வந்தார். அவர் வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தான் யாழ் அடைக்கல மாதா கோவில் நீதி மன்றத்தீர்ப்பின்படி ஆயரின் (வடக்கு திருத்தூது மறைமாவட்ட ஆயருக்கு) பொறுப்புக்கு வந்த நல்ல செய்தியும் கிடைத்தது. ஆயினும் ஆயரின் உடல்நிலை சிறப்பான நிலையிலிருந்தது என்று சொல்வதற்கில்லை. போளவத்தை யில் இருந்தபோது மிகவும் கடுமையாக நோயிற்றிருந்தார். எனினும் குணம டைந்து அப்போதைக்கு நலமுடனிருந்தார்.

### ஆயர் பெற்றக்கீனியின் இறுதி நடவடிக்கை

ஆயர் பெற்றக்கீனி வந்து சில நாட் களில் வடக்குத் திருத்தூது மறைமாவட் டத்தைப் பிரிக்க நடவடிக்கையெடுத்தார். அதன்படி வடக்குக்திருத்தூது மறை மாவட்டத்தின் வடக்கு, கிழக்கு மாகா ணங்கள் அமலமரித்தியாகிகள் சபையின ரால் பரிபாலிக்கப்படும். கல்பிட்டி, கைம் மல், சிலாபம் ஆகிய இடங்கள் யாழ் திருத்தூது மறைமாவட்டத்தில் பணியாற் றிக்கொண்டிருந்த அமலமரித்தியாகிகள் அல்லாத குருக்களின் பொறுப்பில் விடப் படும். வடக்குத்திருத்தூது மறைமாவட்டத் தின் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் ஆயர் பெற்றக்கீனிக்கே இருந்தாலும், தமக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் அமலமரித்தியாகிகள் சபையினர் சுயமாக இயங்கக்கூடிய நிலையிலிருந்தது. அவர் களின் துறவுக்குழுமத்தலைவர் ஆயர் பெற்றக்கீனியியை கலந்தாலோசிக்காது அங்கு பணியாற்றும் தமது குருக்களுக்கு மாற்றும் வழங்கலாம் ரோமை விசுவாசப் பரப்புதல் சபையிலிருந்து யாழ் திருத்தூது மறைமாவட்டத்திற்கென வரும் நிதியுத வித் தொகையில் பாதியையும் மற்றும் அவர்களது மறைத்தளங்களிலிருந்து பெறப் படும் காணிக்கைகள் மற்றும் வரும்படிக ளையும் அவர்கள் எடுத்துக்கொள்ளலாம். அமலமரித் தியாகிகளல்லாதோர் விசுவாசப் பரப்புதல் சபையனுப்பும் மற்றப்பாதிநிதி யையும், பிரசித்திபெற்ற தலைவில்லு புனித அன்னாள் திருத்தலம் மற்றும் அவர்களுடைய பராமரிப்பிலுள்ள மறைத் தளங்களிலிருந்து கிடைக்கும் வரும்படி யையும் பெற்றுக்கொள்ளலாம். புனித அன்னாள் திருத்தலத்திலிருந்து கணிச மான வரும்படி கிடைத்தமை குறிப்பிடத் தக்கது.

இவர்கள் எவரும் ஆயர் பெற்றக்கீனிக்கு தாம் பெற்றுவரும் வரும்படிக்குக் கணக் குக் கொடுக்கவேண்டும் என்ற நியதி

அருட்பணி S.V.B.மங்களராஜா

பேணப்படவில்லை. அத்துடன் அவர்கள் தம்மிடம் கைவசம் உள்ள நிதியைக் கொண்டு ஐரோப்பாவிலிருந்து தமக்குத் தேவையான தமது சபை மறைப்பணி யாளரையும் பெற்றுக்கொள்ளலாமென்றி ருந்தது. (அடுத்த இதழில் தொடரும்...)



# நிறைந்த கனிதரும் குடும்பங்கள்

திருமணம் மானிட சமுதாயத் தின் அடிப்படை அணுவாகும். இந்த அடிப்படை வலுவாக இருந்தால் தான் சமுதாயம் என்ற கட்டடம் உறுதியாக, சரியாக நிலைத்து நிற்கும். குடும்பம் மனித வாழ்வின் பலவகைப் பரிமாண வளர்ச்சியின் தொடக்கப்பள்ளி.

மனித உறவுகள், பழக்க வழக் கங்கள், மனித மதிப்புக்கள், அறநெறிக் கோட்பாடுகள், ஆன்மீக வழிமுறைகள், வாழ்வின் அர்த்தங்கள், துன்ப துயரங் கள், மகிழ்ச்சி, மனநிறைவுகள் என்று அனைத்தையும் முதன் முதலில் அறி முகம் செய்யும் வாழ்வுக் கலைக்கூடம் குடும்பம். குடும்ப வாழ்வு வளமடையும் போதுதான் சமூகமானது வளர்ச்சியடைகி றது. எங்கு குடும்பம் சிதைகிறதோ அங்கு சமூகம் சிதறுகிறது, திசைமாறிச் செல்கிறது.

கிறிஸ்தவ குடும்பங்கள் தமக் கும் பிறருக்கும் நற்செய்தியாக மாற வேண்டும் என்ற திருச்சபையின் உயர்ந்த உள்நோக்கு பாராட்ட வேண்டிய தும் பெருமைக்குரியதுமாகும். கிறிஸ்தவ பாரம்பரியம் குடும்ப வாழ்வுக்கு தனிச் சிறப்பிடம் கொடுத்து அதனைப் போற்று கின்றது. குடும்ப உறவை எமது கலா சாரத்திலும் அதிகமாக இருப்பதை நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் நன்கு உணர்வோம்.

குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை. இது வானளாவிய மரமாக வளர்ந் தோங்க, குடும்பம் என்ற நல்ல நிலத் திலே விதை விதைக்கப்படுகிறது. ஒரு நாட்டில் குடும்பங்கள் சீராக இருந்தால் அங்கும் பொருளாதாரம், நாகரிகம், அரசு, ஒழுக்கம் ஆகியவை சிறப்பானவையாக இருக்கும்.

இயேசு பெண் மூலமாகப் பிறந்து பெண்மைக்குச் சிறப்புச் சேர்த்தார். அதே சமயம் ஆண் குழந்தையாகப் பிறந்து ஆண்மைக்குப் புகழ் சேர்த்தார். குடும்பத்தில் வளர்ந்து குடும்பத்தை திருக்குடும்பமாக்கினார்.

நமக்குப் பெற்றோர்கள் அன் பைக் கற்றுத் தருகிறார்கள். நாம் குழந் தைகளுக்கு அன்பைச் சொல்லித் தரும் போது அது முழுமை பெறுகிறது. பற்றுள் ளார் மீது படரும் அன்பு, பார்க்காதவர் மீதும் விரியும் போது தோன்றுவதே அருள். அன்பு விரிய விரிய அது மொட் டாக இருந்த நிலையிலிருந்து மலர்ந்து பூவாகப் புன்சிரிப்புச் செய்கிறது.

இன்று குடும்ப வாழ்வு பல்வேறு தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. எனவே குடும்பத்தின் மாண்பையும் புனிதத் தன்மையையும் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. மேலும் குடும்ப வாழ் வில் எழக்கூடிய சிக்கல்களுக்குச் சரியான ஆற்றுப்படுத்தலும் வழிகாட்டுதலும் தேவைப்படுகிறது. பொறுப்பு நிறைந்த குடும்ப வாழ்விற்கு தகுந்த தாயாரிப்பு அவசியமாகிறது. கிறிஸ்தவ குடும்பங்கள் சமுதாயத்தில் ஒளிரும் தீபங்களாகச் சுடர் விட வேண்டும் என்பதே திருச்சபையின் ஆவலும் எதிர்பார்ப்பும் ஆகும்.

ஆண்டவரின் விருப்பத்தை, அன்பை மையமாக வைத்து

எழக்கூடிய சிக்கல்களுக்குச் சரியான ஆற்றுப்படுத்தலும் வழிகாட்டுதலும் தேவைப்படுகிறது. பொறுப்பு நிறைந்த குடும்ப வாழ்விற்கு தகுந்த தாயாரிப்பு அவசியமாகிறது. கிறிஸ்தவ குடும்பங்கள் சமுதாயத்தில் ஒளிரும் தீபங்களாகச் சுடர் விட வேண்டும் என்பதே திருச்சபையின் ஆவலும் எதிர்பார்ப்பும் ஆகும்.

ஆண்டவரின் விருப்பத்தை, அன்பை மையமாக வைத்து கட்டியெ ழுப்புகின்ற குடும்பத்தில் உண்மையான மகிழ்ச்சியும், வளர்ச்சியும் நிறைவாக இருக்கும். முன்மாதிரியாக வாழ்கின்ற பெற்றோர்களினால் மட்டுமே நல்ல பொறுப்புள்ள நல்லொழுக்கமுள்ள ஞானம் நிறைந்த பிள்ளைகளை இந்த சமூகத்திற்கு கொடுக்க முடியும்.

இந்த சமூகத்திலே காணப்படு கின்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் ஆண்டவரின் அன்பை மையப்படுத்தி வாழ்கின்ற குடும்பத்தில் தீர்வுகள்உண்டு. புதிய வழிகளும் உண்டு. உண்மை யான அன்பு தன்னகத்தே நான்கு முக்கிய பண்புகளைக் கொண்டுள்ளது.

முதலாவதாக நல்லுறவை

அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் CMF
கிளரீசியன் மறைப்பணியாளர்கள் சபை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தில் வளர்க்கும் இரண்டாவதாக கருணையுடன் செயற்படும் குறிப்பாக மற்றவர்களுடைய துன்ப துயரங்களில் உடன் பயணிக்கும்.

மூன்றாவதாக எங்கெல்லாம் உண்மையான அன்பு இருக்கின்றதோ அங்கு உண்மையான மகிழ்ச்சி நிறை வாக இருக்கும். நான்காவதாக நான் என்ற ஆணவம் அழிந்து நாம் என்கிற குடும்ப உணர்வு பிறக்கும்.

எனவே தூய அன்பை எங்க ளுடைய வாழ்க்கையில் கற்று, பயிற்சி செய்து, வளர்ச்சி அடைந்து, முதிர்ச்சி பெற்று எங்களுடைய குடும்பங்களை திருக்குடும்பங்களாக மாற்றுவோம்.

# பாராட்டி வாழ்த்துகின்றேன்



## பூத்திட்டான் புதுயுகத்தில்

யாம் செய்த தவமோ – எம்
இனம் செய்த தவமோ – ஏன் யாழ்
மறைமாவட்டம் செய்த தவமோ – என
அனைவரையும் பூரிக்க வைத்து
ஜெயராஜ மலரில் பூத்திட்டான் **போல் ஜான்சன்**
யாழ் மரியன்னை பேராலயத்தின் மடியில் வளர்ந்திட்டான்

தோன்றிற் புகழுடன் தோன்றுக என்பது போல்
தரம் ஐந்தில் புலமைப் பரிசில்
க.பொ.த.சாதாரணம் மற்றும் உயர்தர பரீட்சைகளில்
தேசிய மட்டத்தில் சாதனைகள் படைத்து
தனக்கென முத்திரையும் பதித்ததால்
புனித பத்திரிசியார் கல்லூரியும்
தமிழ்க் கல்விப் புலமும் பெருமை பெற்றது

நல்ல வழியும் நாட்டில் சிலபேருக்காம் என்று
சிசிலியா மலரும் அப்புகழ் பெற்றாள்
ஒரு கொப்பில் பூத்திட்ட மலிலாவும் தவம் செய்திட்டாள்
கல்விப் புலம் களிகூர
ஆங்கில மொழிமூலத்தில் தேசியத்தில் முதலிடம்
நலமே பெற்ற நன்மகனே வாழ்க

எம் மக்கள் வாழ்வில் வசந்தம் பொங்க
சாதனையின் சிகரத்தில் பொறியியலாளராகி
உயர் சேவை செய்வேன் என்றுரைத்தான்
வைகறையில் அரவமின்றி கடன்புரியும் சூரியன்போல்
மாணவரே அதிகாலையில் கற்றுப்
பயன் பெறுவீர் என்றுரைத்தான்

வெற்றியின் சிகரம் ஒரு அவனுருவில்
அன்பு அறம் ஒப்புரவு பணி அடக்கம்
அணிகலனாய் அவனைத் தாங்கிட
யாழ் பத்திரிசியார் வீதியும் பெருமை கொண்டது

தங்கையவள் ஈன்றிட்டதால் மாமனிவன்
தொபியாசும் மாண்புற்றான்
மட்டில்லா மகிழ்வுதனை மனம் கொண்டான்
மார் தட்டி முரசறைந்தான்
இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றேன்..
அருட்சகோ.செ.தொபியாஸ் CMSF
பிறான்சிஸ்கன் சகோதரர்

## இளையோரின் கல்வி நேர்மறை உணர்வுகளை வளர்க்கவேண்டும்

21ஆம் நூற்றாண்டில் உலகெங்கும் உள்ள மனிதர்கள் உரையாடல் முயற்சிகளில் அதிகம் ஈடுபடவேண்டும் என்றும், இளையோரின் கல்வி நேர்மறை உணர்வுகளை அவர்களிடம் வளர்க்க வேண்டும் என்றும் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா அவர்கள் கூறியுள்ளார்.

பூனே நகரில் ஜனவரி 10 ஆம்திகதிதொடங்கியதேசிய ஆசிரியர் மாநாட்டில் உரையாற்றிய தலாய்லாமா இந்தியாவில் மட்டுமே பழமைக் கலாசாரத்திலிருந்து பெறக்கூடிய உணர்வுகளையும், புதிய தொழில் நுட்பங்களையும் பாடத் திட்டத்தில் இணைக்க முடியும் என்று எடுத்துரைத்தார்.

இந்த மாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய அறிவியல் அறிஞர் Anil Kakodkar அவர்கள் வெகு விரைவாக மாறிவரும் தொழில் நுட்பங்களின் தாக்கத்தை ஆசிரியர்கள் சரிவரப் புரிந்துகொண்டால் மட்டுமே அவர்களால் இளைய தலைமுறையினரை சரியான பாதையில் வழிநடத்த முடியும் எனத் தெரிவித்தார்.

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப் படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்த சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெறவேண்டுகின்றேன்.

AD/02 ஓர் அடியாள்

# விண்ணக வாழ்வில் 1ம் ஆண்டு



"நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
ஓட்டத்தை முடித்துக் கொண்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"
(2 திமோ 4:7-8)

இறைவா உம் பணிக்கென பெயர் சொல்லி
அழைத்துக் கொண்ட உமது மகன்
அருட்சகோதரன்
டொ.குயின்ரஸ் அவர்களின்
விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டில்
சிலுவையில் நீர் சிந்திய இரத்தத்தால்
இவரை தூய்மையாக்கி உமது
இன்ப சந்நிதானத்தில் காத்தருள
மன்றாடுகின்றோம்.
ஆமென்.

அமரர்
**அருட்சகோதரன் டொ.குயின்ரஸ்**

மலர்வு: 11.10.1990 உதிர்வு: 25.01.2017

குடும்பத்தினர்.
13ம் வட்டாரம்
நெடுந்தீவு

AD/07

# விண்ணவரோடு 31 ம் நாள்

## அமரர் சூசை மேரி கிறிஸ்ரீனா



"இன்றே நீ என்னோடு வான் வீட்டில்
இருப்பாயென்று உறுதியாக நான் உனக்குச்
சொல்லுகின்றேன்"
(லூக்கா 23:43)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் 25.01.2018 (வியாழக்கிழமை) காலை 6.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உதயம் 26.05.1949
அஸ்தமனம் 26.12.2017

கேணியடி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

# அகவை நூறும்
# முப்பதாவது ஆண்டு நினைவஞ்சலியும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 23 |
| 01 | 08 |
| 1918 | 1988 |

## றிச்சேட் லூயிஸ்

(Retired Store Keeper Food Control Dept)


ஆண்டுகள் முப்பது சென்றாலும்
எமது அன்பு பப்பாவின் திருமுகத்தை
பிறந்த நாளில் நினைவுகூருவோம்...

இல. 793, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD/04

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



பேரினில் நல்ல பண்பைக் கொண்டுமே
நாளும் எங்கள் ஊரினில் உத்தமராய் உலாவினீர்
உங்கள் வேரினில் முளைத்த நாங்கள்
வெதும்பியே நிற்கின்றோம்
பறவைகள் குஞ்சைக் காக்கும்
நிலையென எம்மை உங்கள் – சிறகினில்
வைத்துப் பேணி சிறப்புடன் வாழவைத்தீர்
மறைநூல் இயம்பும் அந்த – தேவனின்
உலகில் நீங்கள் சென்றுமே
ஆண்டு இரண்டு ஆனதே.. அப்பா
உங்கள் ஆன்மா இறைவனில்
இளைப்பாற வேண்டுகின்றோம்.

## சின்னத்தம்பி அருமைநாயகம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி)

தோற்றம்: 26.02.1940 மறைவு: 09.01.2016

உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

AD/01

# விண்ணக வாழ்வின் 12ம் வருட நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 13 |
| 06 | 01 |
| 1913 | 2006 |



## அமரர் மடுத்தீன் அந்தோனிப் பர்னாந்து

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்" (தி.பா.27:4)

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் அன்புக்கு இலக்கணமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு ஐயாவே
நீர் இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்

5ம் வட்டாரம்
மண்டைதீவு

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

AD/03

# யாழ் ஆயருடனான இவ்வார சந்திப்புகள்







அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகார பிரதித் தலைவர் ரிலு பற்றிக் மற்றும் சியான் ருத் ஆகியோர் 09.01.2018 அன்று யாழ் ஆயரை ஆயர் இல்லத்தில் சந்தித்து வடமாகாண சமகால நிலவரம் பற்றிக் கருத்துப் பரிமாறினர்.

யாழ் ஆயர் அவர்களை இந்தியத் துணைத் தூதர் கௌரவ ஆ.நடராஜன் அவர்கள் 11.01.2018 ஆயர் இல்லத்தில் சந்தித்து சமகால நிகழ்வுகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அருட்பணி J.B.அன்ரனி அடிகளார் முதுதத்துவமாணி (M.Phil) பட்டத்தையும் அருட்பணி B.பிராயன் அடிகளார் முதுமாணி (M.A) பட்டத்தையும் பெற்றுக்கொண்டனர். அருட்தந்தையர்களை பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.



புனித வின்சன் டீ போல் மத்திய சபை நிர்வாகத்தினர் 07.01.2018 யாழ் ஆயரை ஆயர் இல்லத்தில் சந்தித்து புத்தாண்டு இறையாசீர் பெற்றுக்கொண்டனர்.

## பல்லாயிரக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

மாலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கதிரை மாதா ஆலயத்திலிருந்து செபமாலை பவனியாக புறப்பட்டு புனித யோசவ் வாஸ் திருத்தலம் அமையவுள்ள இடத்திற்குச் சென்று அங்கு யாழ் மறை மாவட்ட ஆயர் தலைமையில் திருப்பலியில் பங்கேற்றனர்.

இவ் முழுநாள் நிகழ்வுகளையும் மிகவும் திறம்பட சில்லாலை பங்குத்தந்தை அருட்பணி A.அகஸ்டின் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார். இந்நிகழ்வுக்குரிய அனைத்துத் திட்டமிடல் பணிகளும் குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் அமைக்கப்பட்ட யோசவ் வாஸ் ஆண்டுக் குழுவினரின் ஒத்துழைப்புடன் செவ்வனே நிறைவேற்றப் பட்டது.

## சுதுமலை புனித யூதாததேயு...

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறைக்கோட்ட முதல்வர், முன்னைய ஆலயத்தின் ஸ்தாபகரான அருட்பணி S.J இம்மானுவேல் அடிகளார் மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள், பிற பங்குகளைச் சேர்ந்த இறைமக்கள், அவ் ஆலயத்தைச் சூழவுள்ள இந்து சமய மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## மாதகல் தூய லூர்து அன்னை திருத்தல திருவிழா

மாதகல் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள தூய லூர்து அன்னை திருத்தல திருவிழா 17.02.2018 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அன்னை வழியாக ஆண்டவன் அருளைப் பெற்று இறையுறவில் வளமுடன் வாழ அன்புடன் அழைத்து நிற்கின்றோம். 08.02.2018 ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாட்கள் அரம்பமாகி தினமும் மாலை 4.45 மணிக்கு நவநாட்கள் நடைபெறும்.

16.02.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு அன்னையின் திருச்சுரூபத் தேர்ப்பவனியும், நற்கருணை வழிபாடும் நடைபெறும்.

17.02.2018 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி நடைபெறும்.

## யாழ்ப்பாணம் மறை....

(01ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது யாழ் மறை மாவட்ட ஆயரின் அனுமதியுடன் சமூக தொடர்பு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. அன்ரன் ஸ்டீபன் அடிகளாரினால் மீண்டும் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### புனித யோசவ் வாஸ் படங்கள் விற்பனைக்கு

இலங்கையின் திருத்தூதரான புனித யோசவ் வாஸ் அடிகளாரின் அழகிய படங்கள் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்குண்டு.

## கரவெட்டிப் பங்கில் பிரசீடிய விழா



கரவெட்டிப் பங்கிற்குட்பட்ட புனித அந்தோனியார், புனித மரியாள், புனித சதாசகாயமாதா ஆலயங்களில் உள்ள பிரசீடியங்கள் ஒன்றிணைந்து பிரசீடிய விழாவினை கடந்த 08.12.2017 அன்றுகொண்டாடினர். இவ்விழாவானது புனித மரியாள் ஆலய பிரசீடிய அங்கத்தவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது.

கரவெட்டிப்புனிதமரியாள் ஆலயத்தில் இடம்பெற்ற இப் பிரசீடிய விழாவில் யாழ் கொமிற்சிய இயக்குநர் தந்தை அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகளாரும், மற்றும் தலைவர் திரு.மரிய கருணைநாயகம், அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்பிரசீடியங்கள் குறுகிய காலத்தில் பங்குத்தந்தை அருட்பணி அ.அமல்ராஜ் அடிகளாரின் கடின முயற்சியின் பலனாக உதயமாகின. அருட்பணி அமல்ராஜ்அடிகளாரின்தொடர்வழிகாட்டலில் இப் பிரசீடியங்கள் துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இந் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள், பிரசீடிய அங்கத்தவர்களைப் படத்தில் காணலாம்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
02.08.1943



விண்ணில்
25.01.2012

### அமரர் அருட்பணி இ.பீற்றர் துரைரட்ணம்

"கோதுமை மணி மண்ணில் விழுந்து
மடிந்தாலொழிய பயன்தராது" என்ற
மறையுண்மைக்குப் பொருள் கொடுத்து
இவ்வுலகில் இறைபணியாம் பிறரன்புப் பணிபுரிந்து
இறைவனுக்கும் பணிபுரிய வான் வீடு சென்ற
அருட்பணி இ.பீற்றர் துரைரட்ணம் அடிகளாரை
அவரது மறைவின் ஆறாம் வருடத்தில்
நினைவுகூர்ந்து விண்ணகத்தில் அவர்
இளைப்பாற இறைவனைப் பணிவோம்.

குடும்பத்தினர்.

## புனித லிகோரியார் ஆலயத்தில் திருக்குடும்ப விழா



சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய திருக்குடும்ப விழா 31.12.2017 அன்று பங்குத்தந்தை அருட்பணி றெக்ஸ் சவுந்தரா அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அகவொளி நிறுவன இயக்குநர் அருட்பணி இ.ஸ்ரலின் அடிகளார் கலந்து கொண்டு இன்றைய காலகட்டத்தில் குடும்பங்களின் அமைவு எவ்வாறு அமையவேண்டுமென வும் திருக்குடும்பம் அதற்கு வழிகாட்டி நிற்பதையும் எடுத்துக்கூறினார்.

பங்கில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தும்பளை தூய லூர்து அன்னை திருத்தலப் பெருவிழா 02.02.2018 – 11.02.2018

02.02.2018 - நவநாள் வழிபாடுகள் - திருச்செபமாலை மாலை 4.30 மணி
10.02.2018 - நற்கருணைத் தினம் - திருச்செபமாலை மாலை 5.00 மணி
யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில்
11.02.2018 ஞாயிற்றுக்கிழமை திருத்தலப் பெருவிழா
முதல் திருப்பலி – காலை 5.30 மணி
திருநாள் திருப்பலி – காலை 7.00 மணி
யாழ் ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

திருத்தலப் பரிபாலகர்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம். 360. பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.